749

# புதுமைத் தமிழ் வாசகம்

மூன்றும் படிவம்

சிறப்புப் பகுதி

OFFICE ... REGISTRAR ...
20 DEC 1954
749
4-54

ஆக்கியோன் :

வித்வான் V. மாணிக்கம்

M&G Process Trichy

G. GOPAUL PILLAI
PUBLISHERS
...AKULAM | 2/27 BROADWAY
...HIRAPALLI | G.T. MADRAS.

TB
031(3)
N54
87908

# புதுமைத் தமிழ் வாசகம்

## மூன்ரும் படிவம்—சிறப்புப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1954

ஆக்கியோன் :
வித்வான் V. மாணிக்கம்

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 0–10–0

முதற் பதிப்பு—செப்டம்பர், 1954

TB
031(3)
N54

87908

Kabeer Printing Works, Madras (2652)

# முன்னுரை

இவ்வாசக வரிசை துரைத்தனத்தாரால் 1952-ஆம் ஆண்டு புதிதாகத் திருத்தியமைக்கப் பட்ட பாடத்திட்டத்திற் கிணங்க எழுதப்பட்டது. இவ்வரிசையில் இப்புத்தகம் மூன்றும் படிவம் சிறப்புப் பகுதிக்கு உரியதாகும்.

இதனுள் அமைக்கப்பட்டுள்ள பாடங்கள் வகுப்புக்கு ஏற்றவையாய் உள்ளன. வகுப்பின் தகுதிக்கேற்ப மொழிநடை அமைக்கப்பட்டுள் ளது. பாடங்களில் கண்ட செய்திகள் மாண வர்க்கு உற்சாகம் தருமாறு வரையப்பட்டுள்ளன. எல்லா வகையிலும் இப்புத்தகம் இவ்வகுப்பு மாணவர்க்குப் பொருந்தியதாயிருக்குமென்று நம்பு கிறேன்.

கல்வித்துறை சார்ந்தோர் இதனை ஆதரித்து என்னை ஊக்குவார்களென்று எண்ணுகிறேன்.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரை நடைப்பகுதி** | | |
| 1. | பொய்யாக் குலக்கொடி | ... | 1 |
| 2. | அதியமானின் வள்ளன்மை | ... | 8 |
| 3. | பொறுமையின் பெருமை | ... | 17 |
| 4. | ஆதிமந்தியார் | ... | 25 |
| 5. | தாயின் தியாகம் (நாடகம்) | ... | 32 |
| | **செய்யுட் பகுதி** | | |
| 1. | பழமொழி நானூறு | ... | 50 |
| 2. | அறநெறிச் சாரம் | ... | 52 |
| 3. | அரிச்சந்திர புராணம் | ... | 54 |
| 4. | நள வெண்பா | ... | 59 |
| 5. | மனோன்மணீயம் | ... | 61 |
| 6. | தனிப் பாடல்கள் | ... | 63 |



காவிரி நதிப்பிரதேசம்
1 கோயம்புத்தூர் ஜில்லா
2 சேலம் ஜில்லா
3 திருச்சிராப்பள்ளி ஜில்லா
4 தஞ்சாவூர் ஜில்லா
புதிய சாகுபடி நிலங்கள்
மைசூர் இராஜ்யம்
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
மைல்கள்
0
50
100
76
78
80
12
10
மெர்க்காரா
கிருஷ்ணராஜ சாகரம்
கண்ணம்பாடி அணை
ஸ்ரீரங்கப்பட்டணம்
காவிரி
மைசூர்
சிவசமுத்திரம்
மேட்டூர் அணை
சேலம்
பவானி
ஈரோடு
பவானிநதி
நொய்யல்
காவிரிநதி
மேல் அணைக்கட்டு
கோயம்புத்தூர்
திருப்பூர்
கரூர்
அமராவதிநதி
திருச்சி
ஸ்ரீரங்கம்
தஞ்சாவூர்
காவிரிப்பட்டினம்
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
காலிமர் முனை

# மூன்றும் படிவம்

## சிறப்புப் பகுதி

---

## 1. பொய்யாக் குலக்கொடி

பொய்யாக் குலக்கொடி என்ற சொற்றொடரைச் செவியேற்ற அளவிலே கொடி யார், யாருடைய குலக்கொடி, அவள் பொய்யாதது எங்ஙனம் என்ற ஐயவினாக்கள் அனைவருள்ளத்திலும் எழுவது இயல்பே. இத்தொடர் மொழி வேறு எவரையும் குறிக்கவில்லை. வான் பொய்ப்பினும் தான் பொய்யாது பல்வளம் பெருக்கிப் பாவலர் பலரும் சோழர் தங்குலக்கொடி என பாராட்டும் சீர்மிக்க காவிரியாறேயாம்.

காவிரி, குடகு நாட்டில் தோன்றினும், மைசூர் நாட்டிலும், கொங்கு நாட்டிலும் பாய்ந்தோடி வந்தாலும், பல காலாய்ப் பிரிந்து பல்வளமும் மல்கச் செய்வது சோழ நாட்டில்தான். இக் காரணம் பற்றியே பாவலர் பலரும், தத்தம் பாக்களில் பண்புடன் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

மைசூர் நாட்டை வளமுறச் செய்யும் கிருஷ்ண ராஜசாகரமும், சோழவள நாட்டை நெற்களஞ்சியமாகச் செய்யும் கல்லணை, மேலணை, கீழணைகளும், மேட்டூர் நீர்த்தேக்கமும் காவிரியாற்றின் பயனைப் பன்மடங்கு பெருக்கியுள்ளன. மேலும், சிவசமுத்

திரம், மேட்டூர் ஆகிய இடங்களில் நீரோட்ட சக்தி மின்சார சக்தியாக மாற்றப்பட்டு, விளக்கெரிக்கவும், எந்திரங்களை ஓட்டவும் பயன்படுத்தப் பெறுவதால், விவசாயத் தொழிலேயன்றி, வேறு பல தொழில்களையும் காவிரி வளம்படுத்துகிறது.



சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி

கற்றோரும் மற்றோரும் காவிரியைத் தெய்வமாகக் கருதி வழிபாடியற்றுகின்றனர். 'தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப் புண்ணிய நன்னீர்' என்று இளங்கோவடிகள் தாமியற்றிய

சிலப்பதிகாரம் என்னும் நூலில் காவிரிப்பூம்பட்டினத்துச் சங்கமுகத் துறையைப் புண்ணிய தீர்த்தமெனக் குறிப்பிட்டுள்ளார். மாயூரம் முதலானவிடங்களில் துலா முழுக்கிற்காக மக்கள் திரளாய்ச் செல்வதும் இத்தெய்வத் தன்மையை விளக்கப் போதிய சான்ருகும். சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசர், 'பொன்னித் தீர்த்தம்' என்ற தொடரால் காவிரி நதி முழுவதையுமே தெய்வத் தன்மை பொருந்தியதாகக் கூறியிருக்கின்ருர். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் இதன் கடவுட்டன்மையைப் போற்றுகின்ருர்.

இனிக் காவிரியின் வற்ருது வளஞ் சுரக்கும் இயல்பினையும், அதனுற் சிறப்புறும் சோழ நாட்டையும், சோழ மன்னனையும் புலவர்கள் எவ்வாறு போற்றியுள்ளனர் என்பதை யாராய்வோம்.

வேளையறிந்து அமுதூட்டி மக்களை மகிழ்வோடு வளர்க்கும் தாய்போல், காவிரியும் பயிர் விளையும் பருவமறிந்து, பலகாலால் நீர் வளமும் நிலவளமும் பெருக்கி மக்களைப் பாதுகாக்கிறது. இஃது சோழ நாட்டிலேதான் சிறப்பாக நடைபெறுகிறது. எனவே, சோழ நாட்டைக் காவிரி வளம்படுத்தும் இச்சிறப்பை ஊழிக்காலம் வரை நிலைபெற்றிருக்கும் என்ற கருத்தமைத்து,

"வாழி! அவன் தன் வளநாடு மகவாய்,
வளர்க்கும் தாயாகி,
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய்!
வாழி காவேரி!"

என இளங்கோவடிகள் பாடிப் பரவுகின்ருர்.

மணிமேகலை யாசிரியரான தண்டமிழாசான் சாத்தனுரோ வெனின் இக்காவிரி நதியைச் 'செங் கோல் கோடாச் சோழர் தங்குலக்கொடி' என்று புகழ்கின்றார். மேலும், 'மழைக் கோளாகிய வெள்ளி தன் நிலை மாறினும், அதனாற் வறங்கூர்ந்து வற்கடம் தோன்றிக் கோடை தன் கொடுமையால் மக்களை வாட்டினும், காவிரி தன் நிலை மாருமல் பெருக்காற் பேருவகை யூட்டும் இயல்பினது' என்றும் அப்புலவர் பெருமான் புகல்கின்றார்.

பொருநராற்றுப் படை என்பது பத்துப்பாட்டு எனப்படும் சங்க நூற்றொகுதியைச் சார்ந்தது. அஃது முடத்தாமக் கண்ணியார் என்ற புலவரால் கரிகால் வளவனைத் தலைவனாகக் கொண்டு இயற்றப் பட்டதாகும். அதன்கண் அவர் காவிரியின் வளங்குன்றாச் சிறப்பைத் தெற்றென விளக்கியுள் ளார். 'கோடை வெப்பத்தால் மரம், செடி, கொடிகள் எல்லாம் கருகினும், மேகம் கடலில் நீரை முகக்க மறந்தாலும், மழைவளஞ் சுருங்கிப் பெரிய பஞ்சம் தோன்றினாலும், காவிரி தன் வளம் சுரத் தலில் தவறாது. அங்ஙனம் காவிரி வளஞ் சுரத்த லால் சோழ நாட்டில் வயல் வளம் குன்றாது சிறந்து விளங்குகிறது. உழவர்கள் பயிர் விளைவேற்றி, அறுவடை செய்து, நெல்லை மலையெனக் குவிக்கின் றனர். அவர்தம் இல்லங்களில் உள்ள நெற்குதிர் களில் இடமில்லையாம்படி நெல் நிரம்பிக் கிடக் கிறது. இவ்வாறு சோழ நாட்டில் காவிரித் தாயின் கருணையால் ஒரு வேலி ஆயிரம் கலமாக விளை கிறது' என்று அவர் கூறியுள்ளார்.

காவிரியாற்றழைக்கும் கவின்பெறு வளத்தைச்

சிலப்பதிகார ஆசிரியரும் சிறக்க நவின்றுள்ளார். ‘காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத் தோடு கிறது. பற்பல தொழில்களைப் பாங்குடன் இயற்றும் உழவர்களின் ஆரவாரம் ஓங்குகிறது. மதகுகளின் வழியே நன்னீர் சலசலவென இன்னிசை யெழுப்பிப் பாய்ந்தோடுகிறது. நீர்ப் பெருக்கைத் தாங்காமல் கரைகள் உடைபடுகின்றன. எனவே நீர் பேரிரைச்சலோடு ஒரு புறம் பெருகியோடுகிறது. ஆடவரும் பெண்டிரும் புதுப்புனலாடி இன்பந் துய்த்துப் பேராரவாரம் செய்கின்றனர். இங்ஙனம் பல்வேறு ஒலிகளும் பரந்தொலிக்கும்படி காவிரித் தாய் கைவீசி நடந்து வருகிறுள் !’ என்பது அவர் காட்டும் சொற்சித்திர மாகும். இக்கருத்தைத் தான் அவர்,

“ உழவர் ஓதை ; மதகு ஓதை ;
உடை நீரோதை ; தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி ”

எனப் பாடலோவியமாகத் தீட்டியுள்ளார்.

இவ்வாறு பாவலராலும், நாவலராலும் பாராட்டப் பெறும் காவிரி அன்றுபோல் என்றும் வளம் பெருக்கி வருகின்றுள். காவிரியின் வளம் என்றுங் குன்ருது தன் பெயருக்கேற்பப் பொய்யாக் குலக்கொடியாகவே நின்று நிலவுக.

### அரும்பதவுரை

குலக்கொடி - குலத்தில் சிறந்து விளங்கும் பெண் ; வான் - மேகம் ; பொய்ப்பினும் - பெய்யாமற் போனுலும் ; பாவலர் - பாட்டுப் பாடவல்ல புலவர் ; சீர் - சிறப்பு ; மல்க - பெருக ; பண்பு -

சிறப்பு; தண் - குளிர்ந்த; நறும் - மணம் மிக்க; தாது - மகரந்தப் பொடி; சங்கமுகம் - நதி கடலோடு கலக்குமிடம்; சான்று - சாட்சி; சமயகுரவர் - மதத்தலைவர்; புனிதம் - பரிசுத்தம்; அமுது - உணவு; ஊழிக்காலம் - உலக முடிவுகாலம்; பரவுதல் - போற்றுதல்; கோடாத - கெடாத; கோள் - கிரகம்; வறங்கூர்ந்து - வறட்சி மிகுந்து; வற்கடம் - பஞ்சம்; புகல் - சொல்; தெற்றென - தெளிவாக; இல்லம் - வீடு; கவின் - அழகு; நவில் - சொல்; புனல் - நீர்; துய்த்து - அனுபவித்து; சொற்சித்திரம் - சொல்லாலாகிய சித்திரம்; ஓதை - ஓசை; ஓவியம் - சித்திரம்; குன்றுது - குறையாது.

## விஞக்கள்

1. பொய்யாக் குலக்கொடி—என்பது யாது?
2. பாவலர் இதனை ஏன் பாராட்டுகின்றனர்?
3. காவிரியின் தெய்வத்தன்மை எங்ஙனம் பேசப்படுகின்றது?
4. இளங்கோவடிகள் காவிரியின் வளஞ்சுரக்கும் தன்மையை எவ்வாறு பாராட்டுகின்றுர்?
5. மணிமேகலையாசிரியர் காவிரியை எங்ஙனம் போற்றுகின்றுர்?
6. பொருநராற்றுப் படை என்பதென்ன?
7. பொருநராற்றுப்படையில் காவிரியின் வளம் எவ்வாறு போற்றப்படுகின்றது?
8. இளங்கோவடிகள் காட்டும் சொற்சித்திரம் யாது?
9. பிரித்தெழுதுக: குலக்கொடி; பாய்ந்தோடி; தத்தம்; தண்ணறும்; பெருந்துறை; நன்னீர்; கடவுட்டன்மை; சிறப்புறும்; அமுதூட்டி; நிலைபெற்றிருக்கும்; கருத்தமைத்து; தண்டமிழாசான்; செங்கோல்; பேருலகு; பொருநராற்றுப் படை; நூற்றெருகுதி; நவின்றுள்ளார்; பெருக்கெடுத்தோடுகிறது; இன்னிசை; பேராரவாரம்; பாடலோவியம்.

## இலக்கணம்

### வாக்கியத்தின் வகை

1. சில அல்லது பல சொற்கள் தொடர்ந்து வந்து முடிந்த பொருளைத் தருமானால் அது வாக்கியம். அவ்வாக்கியம் பொருளால் பலவகைப்படும்.

2. இராமன் பழத்தைத் தின்றான்—இது சாதாரணமாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதால், 'உடன்பாட்டு வாக்கியம்' (செய்தி வாக்கியம்—Affirmative sentence) எனப்படும்.

3. இராமன் பழத்தைத் தின்னவில்லை—இது இல்லை என்ற பொருளைத் தருகிறது. நிகழாமையைத் தெரிவிக்கும் வாக்கியம் எதிர்மறை வாக்கியம் (Negative sentence) எனப்படும்.

4. இராமன் தின்றானா ?—இது வினாப் பொருளைத் தருவதால், இது வினா வாக்கியம். இவ்வினாவாக்கியம் எதிர்மறையாகவும் வரும்.

(உ - ம்.) இராமன் பழம் தின்னவில்லையா ?

5. இராமா! பாடம் படி—இது கட்டளைப் பொருளில் வந்திருக்கிறது. எனவே இது கட்டளை வாக்கியம் ஆகும்.

6. யானை எவ்வளவு பெரிய மிருகமாயிருக்கிறது! நம் நாடு விரைவில் செழித்தோங்குக !—இந்த வாக்கியங்கள் முறையே வியப்பு உணர்ச்சியையும் விருப்பத்தையும் தெரிவிக்கின்றன. இங்ஙனம் வருபவை வியங்கோள் வாக்கியம் எனப்படும்.

## 2. அதியமானின் வள்ளன்மை

தம்மிடம் உள்ள பொருள்களைப் பிறருக்கு வரையாது வழங்குவது வள்ளன்மை அல்லது வண்மை எனப்படும். இத்தகைய வண்மை மிக்க வள்ளல்கள் பலர் சங்ககாலத்தில் தமிழகத்தில் திகழ்ந்தனர் என்று நூல்கள் தெரிவிக்கின்றன. புலவர்கள் பலர் அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ள பாக்களிலிருந்தே இதனை யறிகின்றோம். இவர்கள் மாரிபோல் கைம்மாறு கருதாமல் பொருளை இரவலர்க்கும் புலவர்க்கும் வாரி வழங்கியவராவர். அவர் ஈத்துவக்கும் இன்பத்தையே பிறவிப் பயன் எனக் கொண்டனர். இரப்பவர்க் கீயாதிருப்பதினும் இறப்பதையே இன்பமாக எண்ணும் இயல்பினர்.

இத்தகைய வள்ளல்களில் ஒருவன்தான் அதியமான். இவனது முழுப்பெயர் அதியமான் நெடுமான் அஞ்சி என்பதாகும். இவன் சேர மரபைச் சேர்ந்த ஓர் சிற்றரசன். குதிரைமலைக் குத் தலைவன். தகடூரைத் தலைநகராகக் கொண்டு தனியரசு செலுத்தியவன். மழவர்கள் என்னும் மரபினர்க்குத் தலைவன்; ஆண்மைமிக்க வீரன்; அஞ்சா நெஞ்சினன்; விழுப்புண் படாத நாளை வீணாளாகக் கருதுபவன். இத்தகைய பெருவீரனை அதியமான் தமிழ்ப் புலவர்களுடன் அளவளாவுதலிலும், தமிழ்ப் பாக்களைக் கேட்பதிலும் பெருவிருப்புக் கொண்டவனா யிருந்தான். பழுத்த மரத்தை நாடி வௌவால்கள் பறந்து செல்வது இயற்கைதானே! அவ்வாறே தமிழ்ப் புலவர்கள் இடைவிடாமல் அதியமானிடம் வந்துகொண்டே

யிருந்தனர். அவன் பெயர் புலவர்களின் பாடல்களில் இடம் பெற்று அழியாத்தன்மை அடைந்து விட்டது. உலகம் உள்ளளவும், தமிழ்நாடும், தமிழ் மொழியும் தன்னிலை கெடாதவரையில் அவன் புகழும் அழியாது நின்றோங்கும் என்பது உண்மை.

கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலமை மெல்லியலாருள் தலைசிறந்தவர் ஔவையார். அவர் அதியமானின் தமிழார்வத்தையும், கொடைப் பண்பையும் கேள்விப்பட்டார். எனவே, அவர் அவனைக் காணும் கருத்தொடு தகடூரையடைந்தார். அதியமானைக் கண்டார். தமிழ்ப் பாடல்களைப் பாடி அவனை மகிழ்வித்தார். ஔவையாரின் பொருள் மிக்க அருங் கவிகளில் அவன் பெரிதும் ஈடுபட்டான். அவரது பாடல்களை அடிக்கடி கேட்கவேண்டும் என்னும் பெரு விருப்பம் அவனுக்கு உண்டாயிற்று. அவரது நற்பண்புகள் அவனது உள்ளத்தைக் கவர்ந்தன. பரிசில் அளித்து விட்டால் அவர் அவ்விடத்தைவிட்டு அகன்று விடுவாரே என அவன் அச்சம் கொண்டான். பரிசில் கொடாமல் இருந்தால் அவர் சிறிது காலமாவது தன்னுடன் தங்குவார் எனக் கருதினான். ஆதலால், அவன் ஔவைக்குப் பரிசில் கொடாமல் காலந் தாழ்த்தான்.

அதியமான் பரிசில் கொடாது நீட்டித்தலைக் கண்ட ஔவையாருக்குச் சினம் மூண்டது. அதியமானை வள்ளல் என உலகம் உரைப்பது உண்மையல்லவோ என அவர் உள்ளம் உளைந்தது. அவனது தமிழறிவிலும் ஐயந்தோன்றியது.

அதனுல் அவர் அதியமானின் அரண்மனையில் தங்காது வெளியே வந்துவிட்டார். கடிமனையின் கடைவாயிலில் காவலன் ஒருவனைக் கண்டார். அவனை நோக்கி ஔவையார், "வாயிற் காவல! உனது தலைவன் வள்ளல் எனப் பலரும் வழங்கிய வார்த்தைகேட்டு இங்கு வந்தேன். அது பொய் என்பது இப்பொழுதுதான் புலப்பட்டது. நான் இங்குவந்து பல நாட்கள் ஆயின. எனினும், அவன் எனக்குப் பரிசில் கொடுத்திலன்; அதன் பொருட்டு நான் கவல்கின்றேன் இல்லை. என்னைப் போன்றவர்கட்கு எங்குச் சென்றுலும் உணவுண்டு. கூர்மையான ஒரு கோடரியைக் கொண்டு காட்டிற்குச் சென்று விறகு வெட்டும் ஒருவனுக்கு விறகு கிடைக்காமற் போய்விடுமா? நான் செல்கின்றேன். நீ இதனை உன் அரசனிடம் சொல்லிவிடு", என்று சொல்லி அவ்விடத்தினின்றும் செல்லத் தொடங்கினுர்.

ஔவையார் கூறிச் சென்றதை வாயிற் காவலன் உடனே அதியமானிடம் கூறினுன். அது கேட்ட அவன் அச்சமும் அவலமும் அடைந்து, விரைந்து சென்று ஔவையாரை அடைந்தான். தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினுன். தனது உள்ளக் கருத்தை அவரிடம் உரைத்தான். அரண்மனைக்குத் திரும்பிவருமாறும் இரந்தான். ஔவையார் அதியமானின் கருத்தையுணர்ந்தார். புலவர்களிடம் அவன் கொண்டிருந்த அன்பை அப்போதுதான் அவரால் அறிய முடிந்தது. இத்தகைய மன்னனின் மனம் அருந்துயர் அடையும்படி செய்தோமே என்று அவர்

தம்மையே நொந்து கொண்டார். பின்பு அதியமானுடன் அவன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்று பரிசில் பல பெற்ருர். அங்கேயே சில காலம் தங்கியிருந்தார்.

அதியமான் தென்மலேயில் அரிதிற் கிடைக்கும் அருங்கனியாம் கருநெல்லிக் கனியைப் பற்றிக் கேள்வியுற்ருன். அக்கனி அமிழ்தத்தின் தன்மையைக் கொண்டது. உண்டவரை நீண்டநாள் உயிர் வாழச்செய்வது. எனவே அங்குச் சென்ருன். பலநாள் முயன்று பாதையமைத்தான். பெருமலே விடரகத்து இருந்த அக்கனியை அரிதிற் கைக் கொண்டான். அதனே உண்ணவும் விரும்பினுன்.

அந்நிலேயில் அதியமான் தனது வருங்கால நிலேபற்றி நினேக்கலானுன்: "ஆம்! இந்த நெல்லிக் கனியை நான் உண்பேன்; நெடுங்காலம் உயிருடன் வாழ்வேன்; அரசர்கள் பலரை வெல்வேன். பகைவர்கள் என்னுடன் போர்செய்ய அஞ்சுவர். நெடுநாள் உயிர் வாழ்ந்த மன்னன் எனப் பிற்காலத்தவர் என்னேப் போற்றுவர்", என அவன் எண்ணினுன். மறுகணம் அவனுக்கு ஒளவை மூதாட்டியின் நினேவு வந்தது. அவனது மனம் மாறியது. "ஆம், ஆம்; உண்மைதான்; நான் பல வாண்டுகள் உயிரோடு வாழ்வதனுல் என்ன பயன்? போரில் புகுந்து உலகில் துன்பத்தையே யல்லவா மிகுவிப்பேன்! ஆனுல், ஒளவை இக்கனியை யுண்டால், ஆ! எவ்வளவு நன்மை யுண்டாகும்! அழியாச் செல்வமாகிய அருந்தமிழ்ப் பாடல்கள் பல அவர் வாயிலிருந்து வருமே. தமிழ் மொழி நன்கு தழைக்குமே! மாநில மாந்தர்

மாண்புறு வாழ்வு பெறுவரே! சரி! இதுதான் சிறந்த முடிவு. அரிதிற் பெற்ற அமுதக் கனியை அவருக்கே அளிப்பேன். இதன் பெருமையை முதலில் உரைத்தால் அவர் இதை உண்ண மறுத்தாலும் மறுக்கலாம். ஆகவே .முதலில் அவர் இதனை உண்ணுமாறு செய்வேன். பின்னரே அதன் பெருமையைப் பகர்வேன்'' என நினைந்து உவந்தான். அங்ஙனமே ஒளவையாரை உண்



அதியமான் ஒளவைக்கு நெல்லிக்கனி அளித்தல்

ணவும் செய்தான். என்னே அதியமானின் கொடைத்திறம்! பிறர்க்கென வாழும் பேரருளாளனன்றோ அவன்!

அருந்திய பின்னரே ஒளவை அக்கனியின் அருமை பெருமைகளை அறிந்தார். அப்பொழுது

அவரது மனம் எவ்வாறு இருந்திருக்கும் என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அதியமானின் அரும்பண்பினை நினைந்து பெருவியப்பெய்தினர். அதியமானை நோக்கி, "அதிய! பெருமலை விடரகத்து விளங்கிய சிறியிலை நெல்லிக்கனியை அதன் அருமை அறிவியாது சாதல் நீங்க எனக்குக் கொடுத்தருளினய். எனவே தன்னலங் கருதாது, தேவர் ஆக்கம் கருதி ஆலகாலத்தினை உண்டு அமுதத்தினை அவர்களுக்கு அளித்த அரனைப் போல், நீயும் நீடூழி காலம் வாழ்வாயாக", என்று வாழ்த்தினர்.

அதியமான் போரில் விழுப் புண்ணேற்று விண்ணுல கெய்தினன். அவன் பிரிவாற்ருது அருந்துயர் அடைந்த ஔவை செயலற்ற நிலையில் அவனை நினைந்து வருந்திப் பாடினர். அதில் அவர் அதியமானின் அரும் பண்புகளை யெல்லாம் அனைவரும் அறியும்வகை அறைந்துள்ளார். அஃது பின்வருமாறு :

"அதியமான், பெருஞ்சோறு கிடைத்தால் எமக்கே ஈந்து விடுவான். சிறுசோறு கிடைத்தால் எம்மோடு இருந்து கூடவுண்டு இன்பம் நல்கு வான். உணவு கிடைக்கும் இடங்களை எமக்கு அளித்துவிடுவான். அம்பும் வேலும் பாய்ந்து வருமிடங்களைத் தனக்கமைத்துக் கொள்வான். அக்காலங் கழிந்ததே! நறுமணங்கமழும் தன்கை யால் புலால் கமழும் எம் தலையைத்தடவிக் கொடுப் பான். அந்நாள் இனிவருமோ? பகைவன் பகழி அவன் ஆகத்தில் ஆழ்ந்தது! ஆ! அவன் மார்பி லோ அந்த அம்பு பாய்ந்தது! இல்லை! இல்லை!

பாணர்களின் மண்டைப் பாத்திரத்தில் பாய்ந்தது. இரப்பவர் கையில் பாய்ந்தது. புலவர்களின் நாவில் புகுந்தது. இனி இவ்வுலகில் பாடுகின்றவர்களும் இல்லை. பாடுகின்றவர்களுக்கு ஒன்றைக் கொடுப்ப வரும் இல்லை. பிறர்க்குப் பயன்படாது பூத்து உதிரும் பகன்றைப் பூப்போல பிறர்க்குப் பயன் படாது வாழ்வோரே இவ்வுலகில் பலராவார்'' என்பது அது.

ஒளவையார் பாடலின் கருத்தைக் கவனியுங் கள். தமிழ் நாட்டில் வாழும், தமிழைத் தாய் மொழியாக் கொண்டுள்ள நாமும் புலவர் பாடும் புகழ் பெறவேண்டும். அதுவே தமிழரின் பண்பு. என்றும் பொன்றாது நிற்பது புகழேயன்றோ! அப் புகழுடைலப் பெறுதலே பிறவி யெடுத்ததன் பயன். மாணவர்கள் இதனை மனத்திற் கொண்டு மாண் புற வாழ்தல் தலையாய கடனாம்.

## அரும்பதவுரை

வரையாது - அளவில்லாமல்; வண்மை - ஈகை; மாரி - மேகம்; கைம்மாறு - பிரதியுபகாரம்; இரவலர் - யாசகர்; மரபு - வமிசம்; விழுப்புண் - போர்க்களத்தில் பகைவர் படைக்கலத்தால் முகத்திலும் மார்பிலும் ஏற்படும் புண். அளவளாவுதல் - உரை யாடல் (சம்பாஷித்தல்); இசை - புகழ்; புலமை - அறிவு; மெல்லி யலார் - பெண்கள்; பண்பு - குணம்; உளைந்தது - வருந்தியது; கடி - காவல்; கவல்கின்றேன் - கவலைப்படுகிறேன்; அவலம் - வருத்தம்; இரந்தான் - கெஞ்சினான்; விடரகம் - மலைப்பிளவில் உள்ள இடம்; மாண்புறு - பெருமை மிக்க; பகர்வேன் - சொல் வேன்; ஆக்கம் - மேன்மை; அரன் - சிவபெருமான்; அறைதல்- சொல்லுதல்; புலால் - மாமிசம்; பகழி - அம்பு; ஆகம் - மார்பு; மண்டைப் பாத்திரம் - பிச்சையெடுக்கும் ஓடு; பொன்றாது - அழியாது.

## வினாக்கள்

1. வண்மை என்பதென்ன?
2. வள்ளல்களின் இயல்புகள் எவை?
3. அதியமானின் சிறப்பியல்புகள் யாவை?
4. அதியமான் பரிசில் நீட்டிக்கக் காரணம் என்ன?
5. ஔவையார் காவலனிடம் கூறியது யாது?
6. ஔவையார் தன்னையே நொந்து கொள்ளக் காரணம் என்ன?
7. நெல்லிக்கனியின் சிறப்பு யாது?
8. நெல்லிக்கனி பெற்ற அதியமான் எண்ணியன யாவை?
9. அதியமான் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்ததேன்?
10. ஔவையார் அதியமானை எங்ஙனம் வாழ்த்தினர்?
11. அதியமான் இறந்ததும் ஔவையார் வருந்திக் கூறியன யாவை?

## பயிற்சி

1. பிரித்தெழுது: ஈத்துவக்கும்; சிற்றரசன்; வீணாக; உள்ளளவும்; நின்றோங்கும்; நல்லிசை; தமிழார்வம்; பொறுத்தருளுமாறு; மாண்புறு; பேருருளாளன்; விழுப்புண்ணேற்று; பலராவார்.

2. வாக்கியத்தில் அமைக்க: வரையாது; கைம்மாறு; இயற்கை; இடைவிடாமல்; காலந்தாழ்த்தான்; கைக் கொண்டான்; ஆக்கம்; பொன்றுது; இரப்பவர்; இறப்பவர்.

3. கோடரி; கோடாலி—எது சரியானது? ஏன்?

4. அவன் மார்பிலோ அந்த அம்பு பாய்ந்தது?—செய்தி வாக்கியமாக மாற்றி யெழுது.

## கட்டுரைப் பயிற்சி

1. 'அதியமானும் நெல்லிக் கனியும்' என்பது பற்றி 15 வரிகளில் ஓர் கட்டுரை வரைக.

2. ஔவையார் கோபமும் அது மாறிய விதமும் என்பதையமைத்து 10 வரிகளில் எழுது.

## இலக்கணம்

### வாக்கியம் (வேறு வகைகள்)

1. நான் சந்தைக்குப் போனேன்—இது தனி வாக்கியம். ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தது. (Simple sentence)

2. நான் உன் சொல்லை நம்பவும் முடியாது, உன்னைத் தாய் நாடு செல்ல அனுமதிக்கவும் முடியாது :—இதில் இரண்டு தனி வாக்கியங்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன. இப்படி வருபவை தொடர் வாக்கியங்கள் எனப்படும். (Compound sentence)

3. 'கம்பர் சிறந்த காவியமான இராமாயணத்தை இயற்றியதால், அவர் இறந்தும் இறவாமல் இருக்கிறார்'—இதில் 'அவர் .........இருக்கிறார்' என்ற பிரிவு பொருள் முடிந்த தனி வாக்கியம். 'கம்பர் சிறந்த.........இயற்றியதால்' என்ற பிரிவு, 'இருக்கிறார்' என்ற வினையைக் கொண்டு தான் பொருள் முடிவு பெறுகிறது. எனவே இது தனி வாக்கியத்தைச் சார்ந்து வந்துள்ள சார்பு வாக்கியமாகும். இங்ஙனம் தனி வாக்கியமும் சார்பு வாக்கியமும் கலந்து வருவது கலப்பு வாக்கியம் (Complex sentence) எனப்படும்.

4. "கம்பரே! உம்மைப் போன்ற புலவர்கள் போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர். ஆதலால், அவர்கள் இயமனை விடக் கொடியவர்கள்" என்று சோழன் கூறினான்.—இது சோழன் தானே சொல்லிய வார்த்தைகள். அவைகள் நேர் கூற்றுக் குறிகளுக்குள் அமைக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் வருவது நேர்கூற்று வாக்கியமாகும். (Direct speech)

5. இராமன் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வராவிட்டால், அவன் தண்டிக்கப்படுவான் என்று ஆசிரியர் கூறினார். இதில் ஆரிசியர் கூறுவது படர்க்கை யிடமாக அமைத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு வருவது அயற்கூற்று வாக்கியம்.

[நேர் கூற்று வாக்கியத்தை அயற் கூற்று வாக்கியமாகவும், அயற் கூற்று வாக்கியத்தை நேர் கூற்று வாக்கியமாகவும் மாற்றியமைக்க முடியும்.]

(உ - ம்.) "இராமா! நீ! ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வராவிட்டால், நான் உன்னைத் தண்டிப்பேன்," என்று ஆசிரியர் கூறினார்—என்று மேலே கண்ட அயற்கூற்று வாக்கியத்தை நேர் கூற்று வாக்கியமாக மாற்றலாம்.

## பயிற்சி

1. உங்கள் பாடத்தில் வந்துள்ள, பலவகை வாக்கியங்களையும் தனித்தனியே பொறுக்கி யெடுத்து எழுதி இன்ன வாக்கியம் என்று குறிப்பிடுக.

## 3. பொறுமையின் பெருமை

ஒரு நாள் மாலைப் பொழுதில் வெட்ட வெளியில் தனித்துத் தோன்றியது ஓர் கூடாரம். அதனுள் அதற்குரிய தலைவன் அமர்ந்திருந்தான். கதிரவன் மேற் கடலில் சாய்ந்து விட்டான். காரிருள் வலை வீசத் தொடங்கியது. காற்றின் குளிரோ சொல்லொணுது. தனிமை! தனிமை! எங்கும் வேறென்றும் காணப்படாத தனிமை! அந்த விடம் அப்பொழுது எவ்வளவு பயங்கரமாகத் தோன்றும் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள்.

கூடாரத்தின் தலைவன் ஆபிரகாம். அவன் கடவுட் பற்று மிகுந்தவன். தன் பொருள் எல்லாம் ஆண்டவன் படைப்பான அனைத்துயிர்க்கும் உரியது என்ற உயர்ந்த உள்ளம் படைத்தவன். இறைவழிபாடு இயற்ருமல் உணவுண்ணுன். தஞ்சமென அடைந்தவரை அஞ்சலென்றருளிக் காப்பவன். தனிமையில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

திடீரென்று அவன் காதில் காலடிச் சத்தம் கேட்டது. கூடாரத்தின் வாயிற்றிரை சற்று நீக்கப்பட்டது. தலைநிமிர்ந்து பார்த்தான் ஆபிரகாம். யாரோ முன்பின் அறியப்படாத ஒருவன் உள்ளே நுழைந்தான். அவன் மூப்பு மிகுந்தவன். உடலில் தசையென்பதே காணப்படாத அளவுக்கு மெலிந்திருந்தான். கண்கள் உட்குழிந்து போயிருந்தன. கன்னங்கள் ஒட்டிப் போயிருந்தன. நடையாலும் பசியாலும் நலிந்திருந்த அவனுடல் நடுங்கியது. அவனுடைய பார்வை "எனக்கு உண்ண

உணவும், தங்க இடமும் வேண்டும். உடனே கொடாவிடில் உயிர் நீங்கும்'' என்று கூறுவது போல் தோன்றியது. "தலைவ! நான் ஆற்றவும் பசித்திருக்கிறேன். புசிப்பதற்கு ஏதேனும் வேண்டும். இளைப்பாறவும் இடமளிப்பையோ?'' என வாய்விட்டுக் கூறியிரந்தான்.

ஆபிரகாமோ மறுப்பவன்? அப்பொழுதே ஆதரவு தந்தான். "நண்ப! அஞ்சாதே; இது உன் வீடு. இதில் உள்ள பொருள்கள் எல்லாம் அருட்பெருங் கடலான ஆண்டவனால் அளிக்கப் பட்டவை. எனவே அவை உனக்கும் உரியவை. உன் விருப்பம்போல் இங்கே இன்பமாய் இருக் கலாம்!'' என்று தேறுதல் கூறினான். மேஜையின் மீது உணவு படைத்தான்.

வாடிவந்த விருந்தினன் உணவைக் கண்டான்; உள்ளம் உவந்தான். அஃது அவன் கண்களுக்கு, ஓர் அரசனுக்கு அளிக்கப்பட்ட அரிய விருந்துணவு போல் தோற்றியது. ஆவலோடு உண்ணக் கையை அதன் அருகே கொண்டு சென்றான். ஆனால் அவன் விருப்பம் நிறைவேறவில்லை. ஏன்?

புது மனிதன் இறைவனை இறைஞ்சவில்லை; போற்றிப் புகழும் மொழி யொன்றும் மொழிய வில்லை. தினந்தோறும் உணவளித்து உயிர்களைக் காக்கும் உத்தமனுக்கு நன்றி செலுத்தவில்லை. கண்டான் ஆபிரகாம். அடங்காச் சினம் கொண் டான். அவனருகிற் சென்றான். "ஐயா! நீர் ஏன் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தவில்லை? நம் மைக் காக்கும் அருட்கடலான நம்பனுக்கு நன்றி செலுத்துதல் நம் கடனன்றோ?'' என்று கூறினான்.

விருந்தினனே, "தலைவ! நான் ஆண்டவனுக்கு அஞ்சுவதில்லை. அவனை நான் வழிபடுவதுமில்லை. அதில் அணுவளவும் எனக்கு நம்பிக்கை இல்லை. அங்ஙனம் நான் செய்ய ஒருப்படேன்" எனப் பகர்ந்தான்.

ஆபிரகாமுக்கு வெறுப்பு ஒருபுறம்; வருத்தம் மற்றொரு புறம். அவன் அக்கணமே அம்மனிதனைப் பார்த்து, "ஐய! நான் உன் நிலைக்கு உள்ளம் குழைகின்றேன். ஆனால் எம்மிறைவனை வழிபடாத எவருக்கும் என்னிடம் உணவுபெற உரிமையில்லை. ஆதலின் இப்பொழுதே இவ்விடம் விட்டு நீங்குக," என்று கூறிச் சிறிதும் இரக்கமின்றி வெளியில் துரத்தி விட்டான்.

அந்தோ! பாவம்! அதற்குள் இரவுப்பொழுது தன் முழுவல்லமையையும் காட்டத் தொடங்கியது. எங்கும் காரிருள் சூழ்ந்தது. ஊதைக் காற்று 'உர்' என்று உறுமிற்று. என்ன செய்வான் புது மனிதன்! பாவம்! வேறு வழியின்றி வெளியே சென்று அல்லலுற்றான்.

நிற்க, விருந்தினன் வெளியிற் சென்ற மறு கணமே மற்றுமோர் மனிதன் உள்ளே புகுந்தான். என்ன வியப்பு! கூடாரம் முழுவதும் உட்புறம் தெய்வ ஒளி நிரம்பியது; வெளியிலே இதற்கு மாறான காரிருள். ஒளியின் நடுவே ஓர் உருவம் தோன்றியது. வந்திருப்பவர் வள்ளலான இறைவன் என்பதை ஆபிரகாம் அப்பொழுதே உணர்ந்து விட்டான். பேசவாயெடுத்தான். ஆனால் அவ்வுருவமே முதலில் பேசத் தொடங்கியது.

"இங்கு சற்று முன் வந்த மனிதன் எங்கே?

அவனைச் சற்றும் இரக்கமின்றி இக்கொடிய இருளில் துரத்துவதற்கு உனக்கு உரிமையேது?'' என்று கடிந்து கூறினர் கடவுள்.



"ஒளியின் நடுவே ஓர் உருவம் தோன்றியது"

ஆபிரகாம் அச்சம் கொண்டான்; அவன் உடல் நடுங்கியது; கண்கள் நீரைச் சொரிந்தன; நா குழறியது. அவன் முழந்தாள் மண்டியிட்டு, "எந்தையே! அவனை இங்கேயே வைத்துப் போற்றியிருப்பேன். ஆனால் அவன் பரமபிதா வான தங்களை வழுத்த மறுத்து விட்டான். நன்றி செலுத்தவும் நயந்திலன். அதனாலன்றோ அவனை

அங்ஙனம் அனுப்பினேன். இறையே! என்பிழை பொறுத்தருள்க,'' என இறைஞ்சினன்.

இறைவன் மீண்டும், " அவனது தீய இயல்பை நான் பலவாண்டுகளாக அறிந்துளேன். அவனியற்றும் அல்லல்களை யெல்லாம் அமைதியுடன் ஆற்றி வருகின்றேன். என்றாவது ஒரு நாள் தன் பிழையுணர்ந்து அவன் திருந்துவான் என்று எண்ணியிருக்கின்றேன். அங்ஙனமாக, ஓர் இரவுப் பொழுதுகூட அவனை வைத்து ஆதரிக்க உனக்குப் பொறுமையில்லையா ? பொறுமையுடைமையன்றோ பெருமை! பிறர் செய்யுந் தீமையை மறந்து அவரை மன்னித்தல் அன்றோ மாண்பு!'' என்று கூறினர்.

ஆபிரகாம் இறைவனிடம் விடைபெற்று வெளியிற் சென்றான். காரிருளையும் கருதவில்லை. கடுங்குளிரையும் பொருட்படுத்தவில்லை. எங்கும் தேடியலைந்தான். அரிய முயற்சியின் இறுதியில் அம்மனிதனைக் கண்டான். அன்போடு அவனை அழைத்து வந்து, உணவளித்து உபசரித்தான். அவன் ஆரவுண்டு துஞ்சு துயில் கொண்டான்.

பொழுதும் புலர்ந்தது; அருணோதயமாயிற்று. ஆபிரகாம் அரும்பெரும் பொருள் பல அவனுக்கு நல்கி அவனை யனுப்பினான். என்னே பொறுமையின் பெருமை! " இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு!'' என்றது சீரிய செந்தமிழ் மொழி யன்றோ!

## அரும்பதவுரை

காரிருள் - கருமையான இருள்; தஞ்சம் - சரணம்; நலிந்திருந்த வருந்தியிருந்த; ஆற்றவும் - மிகவும்; புசிக்க - சாப்பிட; இரந்தான் - வேண்டினன்; உள்ளம் - மனம்; உவந்தான் - மகிழ்ந்தான்; நம்பன் - கடவுள்; இறைஞ்ச - வழிபட; ஒருப்படேன் - சம்மதிக்கமாட்டேன்; பகர்ந்தான் - சொன்னன்; குழைதல் - வருந்துதல்; வழுத்த - துதிக்க; நயந்திலன் - விரும்பவில்லை; ஆற்றி - பொறுத்து; இறுதியில் - முடிவில்; ஆர - நிரம்ப; துஞ்சு துயில் - ஆழ்ந்த உறக்கம்; அருணோதயம் சூரியன் தோன்றுமுன் வானத்தில் சிவந்த ஒளி காணப்படுதல்; நல்கி - கொடுத்து; இன்னு - துன்பம்; சால்பு - மேன்மை; என்ன பயத்தது—என்ன பிரயோஜனம்?

## வினக்கள்

1. வெட்ட வெளியின் அச்சந் தரும் காட்சி யாது?
2. ஆபிரகாமின் சிறப்பியல்புகள் எவை?
3. விருந்தினன் நிலைமை யாது?
4. ஆபிரகாம் விருந்தினனை எவ்வாறு வரவேற்றான்?
5. விருந்தினன் ஏன் ஆதரவு பெறவில்லை?
6. இரண்டாவது விருந்தினன் யார்? அவன் கூறியதென்ன? அதன் கருத்து யாது?
7. ஆபிரகாமின் மறு மொழி யாது?
8. முடிவில் ஆபிரகாம் செய்ததென்ன?
9. இப்பாடத்தினல் அறியப்படும் நீதி யாது?

## இலக்கணம்

### எழுத்து

**1. குற்றியலுகரம்**

'உ' என்ற உயிரெழுத்துக்கு ஒலியளவு ஒரு மாத்திரை. இந்த உகரம் சில இடங்களில் தனக்கு இயல்பாக உள்ள ஓசையில் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு தன்னியல்பில் குறைந்து வரும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

வரும் முறை :—இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொற்களின் இறுதியில் க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு

வல்லின மெய்யோடுங் கூடி கு, சு, டு, து, பு, று என வரும். இக்குற்றியலுகரம் அதனை அடுத்து வரும் எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்படும். இரண்டு எழுத்து வார்த்தையில் குற்றிய லுகரம் வரும்பொழுது முதல் எழுத்து நெடிலாக இருக்க வேண்டும்.

(உ - ம்.) ஆறு — நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
செக்கு — வன்றொடர்க் ,,
பஞ்சு — மென்றொடர்க் ,,
மார்பு — இடைத்தொடர்க் ,,
வரகு — உயிர்த்தொடர்க் ,,
அஃது — ஆய்தத் தொடர்க் ,,

2. குற்றியலுகரப் புணர்ச்சி

குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்து வந்தால் குற்றிய லுகரம் தான் ஏறி நின்ற மெய்யை விட்டு ஓடிவிடும். மீதமுள்ள மெய்யோடு உயிர் எழுத்துக் கூடும்.

(உ - ம்.) பந்து + ஆடினன் = பந்தாடினன்.
(த் + உ) + ஆ = தா.

குற்றுயலுகரத்தின் முன் 'ய' கரம் வந்தால் 'உ'கரம் 'இ' கரமாகத் திரியும்.

(உ - ம்.) நாடு + யாது = நாடியது.

முற்றியலுகரம்

(3) குற்றியலுகரம் அல்லாதவை முற்றியலுகரம். (முழு இயல்பான ஓசையுள்ள உகரம்.)

(உ - ம்.) வரவு, செலவு.

முற்றியலுகரம் பிற சொற்களோடு புணரும்பொழுது குற்றிய லுகரத்தைப்போலவே விகாரங்களைப் பெறும்.

(உ - ம்.) செலவு + யாது = செலவியாது?
வரவு + யாது = வரவியாது?

1. குற்றியலிகரம்

1. குறைந்த ஓசையைப் பெற்று வரும் 'இ' கரம் குற்றிய லிகரமாம். 'ய' கரத்தை முதலாகக்கொண்ட சொல் வந்து

கூடும்போது குற்றிய லுகரம் திரிந்து ஏற்படும் இகரமும், மியா என்ற அசைச் சொல்லின் முதலில் உள்ள ஓசை குறைந்த இகர மும், குற்றிய லிகரங்களாம்.

(உ - ம்.) நாடு + யாது = நாடி யாது
சென் மியா ; கேண் மியா

2. தன் ஒலியளவில் குறையாது வரும் இகரம் முற்றிய லுகரம்.

(உ - ம்.) இவன் ; மாளிகை.

2. போலி

1. ஒரு வார்த்தையில் ஒரு எழுத்து நிற்க வேண்டிய இடத் தில் அதற்குப் பதிலாக வேறோர் எழுத்துவரினும், பொருள் வேறு படாமல் இருப்பது போலியாகும்.

2. வகைகள் :—

| சரியானது | போலி. | |
|---|---|---|
| 1. ஐயர் | அய்யர் | — முதற்போலி. |
| 2. நீந்தினன் | நீஞ்சினன் | — இடைப் போலி. |
| 3. பலம் | பலன் | — கடைப் போலி. (இறுதிப் போலி) |
| 4. ஐந்து | அஞ்சு | — முற்றுப் போலி. |

# 4. ஆதிமந்தியார்

நமது தமிழகத்தை முடிமன்னர் மூவர் சிறப்புடன் ஆண்டு வந்தனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். கடைச் சங்க காலத்தில் சோணுட்டை சிறப்புடன் ஆண்ட பேரரசன் கரிகாற் சோழன் ஆவன். அவன் காவிரிக்கு இருமருங்கும் கரையமைத்து நாட்டின் வளத்தைப் பெருக்கியதால் ' கரிகாற் பெருவளத்தான் ' எனப் புகழப்பட்டான். அவன் பெருவீரன். அவன் வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்முன். வடநாட்டு மன்னர் எவரும் அவனைத் தடுத்திலர். எனவே அவன் இமயம் வரை சென்று, தனது புலிப் பொறியை அதன்மேல் பொறித்து மீண்டான். அவன் மீளுங் காலத்தில், வச்சிர நாட்டு வேந்தன் கொற்றப் பந்தரை இறையாகக் கொடுத்தான். மகத மன்னர் போர் செய்து தோற்றுப் பகைப்புலத்தில் பட்டி மண்டபத்தைக் கொடுத்தனர். அவந்தி மன்னன் நட்புக்கொண்டு தோரண வாயிலை அளித்தான். கரிகாலன் அம்மூன்றையும் எடுத்து வந்து தனது தலைநகராகிய புகாரில் வைத்தான். அவனது அருஞ் செய்திகளை சிலப்பதிகாரம், பொருநராற்றுப்படை போன்ற நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

கரிகால் வளவனின் மகளாவார் **ஆதிமந்தியார்**. அவர் உருவும் திருவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நல்லிசைப் புலமை மெல்லியலாராவார். அவர் பாடிய பாடல்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. அப்புலவர் பெருமாட்டியின் வரலாறு சுவை மிகுந்ததால், ஈண்டுச் சுருக்கமாக அறிவோம்.

ஆதிமந்தியார் கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதிலிருந்து அவரது புலமை நன்கு விளங்கும். அவருக்குக் கணவனுக வாய்த்தவன் ஆட்டனத்தி என்னும் சேர மன்னனுவான். அவனது பெயர் 'அத்தி' என்பது. அவன் ஆடுதலில் வல்லவனுயிருந்தமைபற்றி அவனை 'ஆட்டன் அத்தி' என்று மக்கள் அழைப்பாராயினர். புலமையும் அழகும் வாய்ந்த ஆதிமந்தியாரும், ஆடலில் வல்ல அத்தியும் பூவும் மணமும் போலவும், நகமும் தசையும் போலவும் ஒருவரை யொருவர் நீங்காது இன்புற்று வாழ்ந்திருந்தனர். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது தானே உலக வியற்கை! அதற்கேற்ப அன்னரது இன்ப வாழ்க்கையிலும் துன்பம் உண்டாகத் தொடங்கியது போலும்.

ஒரு நாள் ஆதிமந்தியும் ஆட்டனத்தியும் காவிரியில் புதுப்புனலாடச் சென்றனர். புதுப்புனலில் மூழ்கி இன்புறும் பொருட்டே அவர்கள் அங்குச் சென்றனர். அவர் நீராடச் சென்றிருந்த இடம் கழார் என்னும் துறையாகும். காவிரியின் புனித நீர் மூழ்குவோருக்குப் பேரின்பம் விளைப்பதன்றோ?

ஆதிமந்தியும் ஆட்டனத்தியும் நெடுநேரம் புதுப்புனல் மூழ்கி இன்புற்றனர். அத்தி நீந்துதலில் வல்லவன். அவன் காவிரியின் நீரோட்டத்தை எதிர்த்து நீந்தினுன். நடனத்தில் சிறந்த அவன் பலவித நடன நிலைகளையும் அந்நீரில் பயின்று பெருமிதம் அடைந்தான். இச்செயல்களால் அவனது கைகள் தளர்வுற்றன. அவனே

காவிரியின் நடுவில் இருந்தான். வெள்ளம் சுழித்துச் சுழித்து அவனை அலைத்தது. அவனால் நீந்திக் கரை சேர முடியவில்லை. அந்நிலையில் அவன் செயலற்றுப் போனான். அவனது உடலைக் காவிரி நீர் இழுத்துச் சென்றது.

தமது கணவனைக் காவிரி நீர் ஈர்த்துச் செல்வதைக் கண்டார் ஆதிமந்தியார். அவர் மனம் என்ன பாடு படும்? எனினும் அவர் புலமை வாய்ந்த புலவரல்லவோ? செய்வகை யறியாது ஓரிடத்திலேயே நிற்பதில் பயன் என்ன? அவர் காவிரிக்கரை வழியே தம் கணவன் எவ்விடத்திலாவது கரை ஏறுவானோ என்று கருதித் தேடிச் சென்றார். அவன் கரையேறி யிருப்பான் என்பதே அவருடைய கருத்து. எனவே அவர் காவிரிக் கரையில் அமைந்த சிற்றூர்களிலெல்லாம் தம் கணவனைத் தேடினார். விழா நடைபெறும் இடங்கள், பெண்டிர் குரவைக் கூத்தாடும் இடங்கள் ஆகிய இடங்கள் தோறும் சென்று தேடினார். அத்தியை அவர் கண்டாரில்லை. காவிரியோ அத்தியை இழுத்துச் சென்று கடலில் சேர்த்துவிட்டது. பலவிடங்களில் காதலனைத் தேடித் திரிந்த ஆதிமந்தியார் இறுதியில் கடற்கரையை அடைந்தார். காதற் கணவனைக் கண்டாலன்றி, வேறொன்றும் செய்வதில்லை என உறுதி பூண்டார் அவ்வம்மையார். அவரது கற்பின் வன்மை எத்திறத்தது என்று சிந்தித்துப் பாருங்கள்!

இத்தகைய கற்பிற் சிறந்த காரிகையின் கணவனைக் கடல் தன்னகத்தே அடைத்து வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவருடைய கற்பிற்குக்

கடல் அஞ்சியது போலும்! கடல் தனது அலைக ளாகிய கரங்களால், அத்தியைத் தள்ளிக்கொண்டு வந்து, கரையிற் சேர்த்து விட்டது. கரையை யடைந்த அத்தி சிறிது நேரம் தன்னுணர்வற்றுக் கிடந்தான். அதுகாலையில் அங்கு **மருதி** என்ற ஒருத்தி கடலில் நீராடிக் கொண்டிருந்தாள். அவள் ஓர் ஆடவன் கடற்கரையில் உணர்வற்றுக் கிடப் பதைக் கண்டாள். அவ்வளவில் அம்மகள் விரைந்து வந்து, அத்தியை யெடுத்து நிழலான இடத்திற் கிடத்தி, உணர்ச்சி யுண்டாதற் கேற்ற செயல் களைச் செய்தாள். அத்தியும் அவளது உதவியால் உணர்ச்சி பெற்று கண்விழித்தான்.

அந்நிலையில் ஆண்டு வந்து சேர்ந்தார் ஆதி மந்தியார். கணவனைக் கண்டார். கவலை யொழிந் தார். கணவனைக் காப்பாற்றிய மருதியை மன மார வாயார வாழ்த்தினர். பிறகு ஆதிமந்தியாரும் ஆட்டனத்தியும் தெய்வத்தை வழுத்தித் தம்மூரை அடைந்தனர்.

கடைச் சங்ககால நூல்களில் பலவிடங்களில் இவ்வரலாற்றுக் குறிப்புக் காணப்படுகின்றது. கணவனைப் பிரிந்து கவலையுற்ற காரிகையாரின் துயரத்திற்கு, ஆதிமந்தியார் தம் கணவனைக் காவிரிக்கரையில் தேடிய காலத்தே உற்ற கடுந் துயரமே உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. கற் புடைய பெண்டிரின் சிறப்பை விளக்குவதற்கு ஆதிமந்தியாரின் வரலாறு உதாரணமாகக் கூறப் படுகின்றது. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங் கோவடிகள், 'கடல், அத்தியின் உயிரைக் கவராது கரை சேர்த்தது ஆதிமந்தியாரின் கற்பின் சிறப்

பினலேயே' என்று கருத்துப்பட இவரது வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். 'ஆதிமந்தியார் பிறந்த புகாரில் யானும் பிறந்தேன்' என்று கண்ணகி பெருமிதத்துடன் கூறியதாக இளங்கோவடிகள் பாடுகின்றார்.

ஆதிமந்தியைப் போலக் கற்புடைப் பெண்டிர் பலர் நம் நாட்டில் வாழ்ந்திருந்தனர் என்று நூல்கள் கூறுகின்றன; அவர்கள் தம் கற்பின் திறத்தால் பல அரிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியதாகக் கூறுகின்றன. இப்பெருமை நம் நாட்டிற்கு என்றும் நின்று நிலவுவதாக!

## அரும்பதவுரை

உணர்வீர்கள் - அறிவீர்கள்; மருங்கு - பக்கம்: பொறி - எந்திரம், அடையாளம்; பொறித்து - எழுதி; கொற்றம் - வெற்றி; இறை - கப்பம்; பகைப்புலம் - போர்க்களம்; புகார் - காவிரிப்பூம்பட்டினம்; வளவன் - சோழன்; திரு - அழகு; புலமை - அறிவு; இசை - புகழ்; ஆட - முழுக; தண்மை - குளிர்ச்சி; புனல் - நீர்; ஈர்த்து - இழுத்து; குரவை - கைகோத்தாடும் கூத்து; காரிகை - பெண்; வழுத்தி - துதித்து.

## வினக்கள்

1. கரிகாற் பெருவளத்தான் என்ற பெயர் வரக் காரணம் என்ன?
2. கரிகாலனின் சிறப்பியல்புகள் எவை?
3. கரிகாலன் வட நாட்டில் பெற்ற பொருள்கள் யாவை?
4. சோழர்களுக்குரிய கொடி யாது?
5. ஆட்டன் அத்தி என்று பெயர் வரக் காரணம் என்ன?
6. ஆதிமந்தியாரின் சிறப்பியல்புகள் யாவை?
7. ஆட்டனத்திக்கு ஏற்பட்ட தீங்கு யாது? எங்கு எவ்வாறு நேர்ந்தது?
8. ஆதிமந்தியார் தம் கணவனை எங்கெங்கு தேடினர்? ஏன்?
9. மருதி அத்தியை எங்ஙனம் காப்பாற்றினள்?

10. ஆதிமந்தியாரின் சிறப்புப் பற்றி இளங்கோவடிகள் கூறுவதென்ன ?

## கட்டுரைப் பயிற்சி

1. ஆதிமந்தியாரின் வரலாற்றைப் பதினைந்து வரிகளில் சுருக்கி வரைக.

2. தமிழ் நாட்டுக் கற்புடைப் பெண்டிர் என்ற செய்தி பற்றிய குறிப்புக்களைத் தயார் செய்க.

3. சோணாடு—பிரித்தெழுது. இலக்கணத்தில் இது எவ் வழக்கு என்று சொல்லப்படுகிறது ? சில உதாரணங் கொடு.

## இலக்கணம்

### 1. சொல்

1. செந்தமிழ் மொழியில் செந்தமிழ்ச் சொற்களேயன்றி வேறு பல சொற்களும் வந்து கலந்துள்ளன. அவற்றை முக்கிய மாக இரண்டு பிரிவுகளுள் அடக்கி விடலாம். அவை வடசொல், திசைச்சொல் என்பன :

2. வடசொல் :—வடநாட்டில் பெரும்பான்மையாக வழங் கிய சமஸ்கிருத பாஷையிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொல் வடசொல் எனப்படும்.

(உ - ம்.) கமலம், காரணம், மூலம்.

3. திசைச்சொல் :—செந்தமிழ் நாட்டையடுத்த அயல் நாடுகளில் வழங்கும் மொழிகளில் உள்ள சொல் அதற்குரிய பொருளுடன் தமிழ் மொழியில் வந்து வழங்குமாயின் அது திசைச்சொல் எனப்படும்.

(உ - ம்.) வெள்ளம் (தண்ணீர்) — மலையமானாட்டுச் சொல் (மலையாளச் சொல்)

தள்ளை (தாய்) — குட்டநாட்டுச் சொல்
எலுவன் (தோழன்) — சீதநாட்டுச் சொல்
சைகிள், மோட்டார் — ஆங்கிலச் சொற்கள்
அலமாரி — போர்ச்சுக்கீசியச் சொல்

### 2. பெயர்ச்சொல்

1. காரணப் பொதுப் பெயர் :—காரணம் கருதி, அக் காரணத்தையுடைய பல பொருள்களுக்கும் பெயராய் வருவது.

(உ - ம்.) நாற்காலி—நான்கு கால்களையுடையது.
(ஓர் ஆதனம், மேஜை, மிருகம்)

2. நாற்காலி கொண்டுவா—என்றவிடத்தில் அச்சொல் நான்கு கால்களையுடைய ஒரு குறிப்பிட்ட பொருளுக்கே சிறப்பாகப் பெயராய் வருகிறது. இங்ஙனம் வருவது 'காரணச் சிறப்புப் பெயர்.'

3. சில பொதுப் பெயர்கள் :

தான், தாம், எல்லாம் ஆகிய மூன்று பெயர்களும், இரு திணைக்கும் பொதுவாய் வரும் பெயராம். எல்லாம் என்பது மூவிடங்கட்கும் பொதுவாய் வரும்.

| | | |
|---|---|---|
| (உ - ம்.) | இராமன் தான் | பசு தான் |
| | சீதை தான் | அது தான் |
| | அவர்கள் தாம் | அவைகள் தாம் |
| | அவரெல்லாம் | அவை எல்லாம் |

யாமெல்லாம் — தன்மை.
நீரெல்லாம் — முன்னிலை.
அவரெல்லாம் — படர்க்கை.

## சொல்

### பெயர்ச் சொல்

(அ) இடுகுறிப் பொதுப் பெயர் : யாதேனும் ஒரு காரணமும் இன்றி தொன்று தொட்டுப் பொருள்களுக்கு இட்டு வழங்கி வரும் பெயர் இடுகுறிப் பெயராகும். அப்பெயர் பல பொருள்களுக்கும் பொதுவாக வரும்பொழுது இடுகுறிப் பொதுப் பெயர் எனப்படும்.

(உ - ம்.) மரம், மலர், மகன்.

(ஆ) இடுகுறிப் பெயர் ஒன்றுக்கு மட்டும் சிறப்பாக வழங்குமேல் அது இடுகுறிச் சிறப்புப் பெயர் எனப்படும்.

(உ - ம்.) இராமன், பனை, முல்லை.

(இ) யாதானும் ஒரு காரணம் கருதிப் பல பொருள்களுக்கும் பொதுவாக வழங்கும் பெயர் காரணப் பொதுப்பெயராம்.

(உ - ம்.) அணி (அணியப்படுவது)
பறவை (பறப்பது)

(ஈ) காரணப் பெயரானது ஒரு குறிப்பிட்ட பொருளையே சிறப்பாகக் குறிக்குமானால், அது காரணச் சிறப்புப் பெயராம்.

(உ - ம்.) வளையல், கிளி.

# 5. தாயின் தியாகம்
## (ஒரு நாடகம்)

[கதைச் சுருக்கம் : மேவார் நாட்டைத் திறமாக ஆண்டு வந்த சங்கிராம சிம்மன் இறக்கவே அந் நாட்டை அவன் தம்பி விக்கிரமசிம்மன் ஆளத் தொடங்கினன். அவன் திறமையற்ற வனுக இருப்பதை அறிந்து சேனைத் தலைவனுன வனவீரன் அவனைக் கொன்று நாட்டைத் தானே கைப்பற்றிக் கொண்டான். காலஞ் சென்ற சங்கிராம சிம்மனுக்கு உதயசிம்மன் என்ற ஒரு ஆண் மகவு இருந்தது. அதனைப் பன்ன என்னும் செவிலி வளர்த்து வந்தாள். விக்கிரமனைக் கொன்ற வனவீரன் பன்ன வளர்க்கும் உதயசிம்மனுல் தனக்குப் பிற்காலத்தில் தீங்கு நேரலாம் எனக் கருதி அவனையும் கொல்ல முற்பட்டான். அவ் வமயத்தில் சிறந்த நாட்டுப் பற்று, ராஜ பக்தி, வீரம், தியாகம் இக்குணங்கள் நிரம்பிய பன்ன அரச குமாரனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை ஒரு தோட்டியின் மூலமாக நகருக்கு வெளியே அனுப்பிவிட்டுத் தனது குழந்தையை அரச குமாரன் என்று சொல்லி வனவீரன் கத்திக்கு இரையாக்கினுள். பின்னர் அவள் அரண்மனையை விட்டு வெளியேறித் தோட்டியிடமிருந்த உதய சிம்மனைப் பெற்றுக்கொண்டு கமல்மேர் நாட்டரசனை அடைக்கலம் புகுந்தாள்.

இருபது ஆண்டுகள் கடந்து சென்றன. உதயசிம்மன் கமல்மேர் அரசனுல் நன்கு பாதுகாக்கப் பெற்றுப் பெரு வீரனுக ஆனுன். அந் நிலையில் மேவார் நாட்டில் வனவீரனது அட்டூழியச் செயல்களால் மக்கள் அவன்மீது மனக் கொதிப்புக் கொண்டிருந்தனர். இதனை அறிந்த உதயசிம்மன் கமல்மேர் அரசனுடன் ஆராய்ந்து அவன் படையின் உதவி பெற்று வன வீரனேடு போருக்குச் சென்றுன். போரில் உதயசிம்மன் வெற்றி பெற்றுன்; வனவீரன் கைதியாக்கப் பெற்றுன். ஆனுல் உதய சிம்மனது மகுடம் சூட்டு விழாவின்போது பன்ன வனவீரனை மன்னித்து விடுதலை செய்தாள். விடுதலை பெற்ற வனவீரன் நாட்டை விட்டு வெளியேற, தன் தந்தையின் அரசைப் பெற்ற உதயசிம்மன் உள்ளக் களிப்புடன் தனக்குப் பகை என்பதே இல்லாமல் மேவார் நாட்டை ஆளத் தொடங்கினுன்.]

## காட்சி—1

இடம் : சித்தூர் அரண்மனையின் ஒரு புறம்.

காலம் : முன் இரவு.

பாத்திரங்கள் : உதயசிம்மன், பன்னு, தோட்டி.

(குழந்தை உதயசிம்மன் தொட்டிலில் உறங்குகிறான். தூரத்தில் யாரோ அழுங்குரல் கேட்கிறது.)

**பன்னு** : (திடுக்கிட்டு) இது என்ன? இந்த வேளையில் யாரோ அழும் குரல் கேட்கிறதே! (குரல் வரும் திசையில் செவி சாய்த்து) மாளிகையில் இருந்தல்லவா இக்குரல் கேட்கிறது! யாருக்கு, என்ன வந்ததோ? அந்தப் பாதகன்......

(தோட்டி பதற்றத்துடன் வருகிறான்)

**தோட்டி** : அம்மா, காரியம் கெட்டு விட்டது! ஆகா!!

**பன்னு** : (பரபரப்புடன்) என்ன! என்ன நேர்ந்தது?

**தோட்டி** : (வருத்தத்துடன்) என்ன நேரும்? விக்கிரசிம்மன் கொலையுண்டார். அந்தக் கொலைகாரன் கூரிய வாளால்......

**பன்னு** : ஐயோ, ஈசனே! அவர் நாளை விடுதலை அடைவார் என்றல்லவா எண்ணியிருந்தேன்!

**தோட்டி** : எமனுக்கு இலக்கான உயிர் விடுதலை அடைவதுண்டா? இறந்தார் அவர். நடந்தது நடந்து விட்டது. போனதைக் குறித்து வருந்துவதால் யாது பயன்? இனி நடக்கவேண்டியதை மனங் கலங்காமல் உறுதியுடன் செய்வது தான் மேல்.

**பன்னு :** (மிக வருத்தத்துடன்) இனி இதற்குமேல் நடக்கவேண்டியது என்ன இருக்கிறது! இறந்தவன் திரும்பி வரமாட்டான். உம்......விதியின் திருவிளையாடல்!

**தோட்டி :** இறந்தவன் திரும்பிவர மாட்டான் ...உண்மையே இது. அவனைப் பற்றிக் கவலைப் படுவதால் பயனில்லை. ஆனால்...

**பன்னு :** என்ன, நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! அரைகுறையாக வார்த்தையை விழுங்கிவிட்டாயே!

**தோட்டி :** ஆம். ஆனால், இருப்பவனைக் காப்பாற்றவேண்டாமா என்று சொல்லவே நான் வாயெடுத்தேன். தங்களுக்குத் தெரியாதது எனக்கு என்ன தெரியப் போகிறது என்று பிறகு எண்ணி வாயை அடக்கிக்கொண்டேன்.

**பன்னு :** ஆம், காப்பாற்றித்தான் தீரவேண்டும். என் அருமை உதயசிம்மனை நான் காப்பாற்றியே தீருவேன். அது என் கடமை. விதியே வந்து குறுக்கிடினும் நான் கடமையினின்றும் வழுவேன். குழந்தை உதயசிம்மன் மேவார் நாட்டின் வருங்கால அரசனல்லவா? மேவார் நாட்டின் மேன்மைச் செல்வமல்லவா? அவ்வரசனை—மக்களின் மேலான செல்வத்தை யார்தாம் ஆபத்தில் கைவிடுவார்? இருக்கட்டும்.

**தோட்டி :** அம்மா தங்கள் மனவுறுதியைக் கண்டு மகிழ்கிறேன். கடமையைச் செய்யத் துணிந்த உங்களுக்குக் கடவுள் அருள் கைகூடுக. (திரும்பிப் பார்த்துத் தூரத்தில் வனவீரன் வருவதால் திடுக்கிடுகிறான்.) தாயே! அதோ வனவீரன் வருகிறான்!

வந்துகொண்டிருக்கிருன் உருவிய வாளுடன்! நிச்சயம், அவன் உதயசிம்மனைக் கொல்லவே வருகிருன். இதில் எள்ளளவும் ஐயமில்லை.

**பன்ஞு:** (உள்ளம் சோர்ந்து) ஆ, வருகிருஞ அக் கொலை பாதகன்? நன்றி கெட்டவன்! நம்பின வரை நட்டாற்றில் விட்டவன்!! ஆ, விதியே, என்ன மோசம் செய்தாய்?

**தோட்டி:** அம்மா, தாயே, மனஉறுதியை நெகிழவிடாதீர்கள். கடமையைச் செய்யக் கலக்கம் ஏன்? விதியை நொந்து வருந்துவதில் பயனில்லை.

**பன்ஞு:** (தைரியமடைந்து) ஆம். நீ சொல்வது உண்மை; (ஆத்திரத்துடன்) அதோ இருக்கும் என் வாளை எடு. கொலைக்குப் பதில் கொலைதான். அக் கொலைகார வனவீரனை இதே நொடியில் இந்த வாளுக்கு இரையாக்கிவிடுகிறேன், பார்.

**தோட்டி:** (மெதுவாக) தாயே, ஏன் இந்தப் பதற்றம்? பதறின காரியம் சிதறும். எதையும் எண்ணித் துணியவேண்டும். மிருக பலத்தைத் தனிமையாக உம்மால் எதிர்த்து நிற்க முடியுமா?

**பன்ஞு:** அப்படியாஞல் உதயசிம்மனை நான் ஒளித்துவிடுகிறேன். நீ அவனை எப்படியாவது நகரக் கோட்டைக்கு அப்பால் வெளியே கொண்டு போய்ச் சேர்த்துவிடு. இது செய்வையா?

**தோட்டி:** அம்மா, இப்போது தாங்கள் செய்யக் கருதியது சரிதான். ஆஞல் வனவீரன் உங்களைச் சும்மா விடமாட்டான். உதயசிம்மன் இல்லை என்ருல் அவன் உங்களையே வெட்டி வீழ்த்துவான்.

**பன்னு :** இது என்ன பிரமாதம்? உதயசிம்ம னுக்கு என் உடல் உதவியானால் அதுவே எனக்கு மகிழ்ச்சி. எனக்குப் பெரும் புகழ். நான் இறப் பதைக் கருதி அஞ்சவில்லை. நான் இறந்தாவது உதயசிம்மன் பிழைத்தால் போதும் என்பதே எனது அவா; என் தவம்.

**தோட்டி :** (தனக்குள்) என்ன வீரம்! என்ன தியாகம்! தன் உயிரைக் கொடுத்தாவது பிற உயிரைக் காப்பாற்றும் வீரப் பெண்மணி இவரை யன்றி வேறு எவர் உளர்? உலகில் இத்தகைய வீரப் பெண்ணை வேறு எங்குக் காணமுடியும்? இவர் அரச குடும்பத்தில் வைத்துள்ள பற்றுதான் என்ன! (வெளிப்படையாக) அம்மா உங்கள் உயிரைக் கொடுப்பதென்பது என்னவோ சரிதான். ஆனால் இந்தத் தியாகத்தால் உதயசிம்மனைக் காப்பாற்ற முடியாது.

**பன்னு :** ஏன்? வனவீரன் வருவதற்கு முன்னமேயே நீ உதயசிம்மனைத் தூக்கிக்கொண்டு நகரத்திற்கு வெளியே சென்றுவிடு. அப்பாதகன் வந்து என்னைத் துன்புறுத்தி உதயசிம்மன் இருப் பிடம் அறிய முற்படுமுன், நானே என்னை மாய்த் துக் கொள்ளுகிறேன். (தன்னை மாய்த்துக்கொள்ளக் கைக் கோடரியை எடுக்கிறாள்).

**தோட்டி :** (தடுத்து) அம்மா, அவசரப்படா தீர்கள். ஆய்ந்தோய்ந்து பாராத காரியம் அவலத் திற்கு இடனாகும். உதயசிம்மனை என்னால் வெளியே எடுத்துச் செல்ல முடியும். ஆனால், நீங்கள் இல்லாமல் ஒரு கணங்கூடத் தனித்து இருக்க மாட்டானே. அவன் 'அம்மா எங்கே?'

என்று என்னைக் கேட்டால் நான் அவனுக்கு என்ன சொல்வது? உண்மையைச் சொல்ல முடியாது; பொய்யும் சொல்ல எனக்குத் தெரியாது தவிப்பேன். அப்போது அவன் நிலைமை யாதாகும்? நீங்களே யோசியுங்கள்.

**பன்னு:** இதற்காகவா நீ கவலைப்படுகிருய்? கவலை வேண்டாம். நீ உதயசிம்மனை மறைத்து எடுத்துக் கொண்டுபோய் கமல்மேர் அரசரிடம் நான் சொன்னதாகச் சொல்லி அவனை ஒப்படைத்துவிடு. பிறகு பேசிக்கொள்ளலாம்.

**தோட்டி:** அம்மா, இது மேலும் துன்பமான செயல். அவ்வரசர் நான் சொல்வதை நம்ப வேண்டுமே! நான் சொல்வதை அவர் நம்பி உதய சிம்மனை ஏற்றுக்கொள்வதாகவும் வைத்துப் பேசுவோம். இன்று மேவாரின் நிலை எப்படி இருக்கிறது? மேவார் முழுவதிலும் வனவீரன் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. இந்த நிலையில் கமல்மேர் அரசரிடம் ஒப்படைக்கப்பட்ட உதய சிம்மன் எவ்விதம் பாதுகாக்கப்படுவான்? அக்கொடிய வனவீரன் இப்பொழுது இல்லையென்ருலும் இன்னும் சில நாட்களில் அவ்வரசர் ஆதரவில் இருந்துவரும் உதயசிம்மனைக் கண்டு பிடித்து விடுவான். அப்போது அவன் கதி யாதாகும்?

**பன்னு:** (தனக்குள்) ஈசனே, எங்கும் இருள் சூழ்ந்தல்லவா இருக்கிறது! உதயசிம்மனை எவ்வகையில் காப்பாற்றுவது என்பதற்கு வழி தெரியவில்லையே! இதுவும் ஓர் காலம்! திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை. (தன் எதிரில் படுத்துறங்கும் இரு குழந்தைகளையும் பார்க்கிருள். சிறிதுநேரம் ஆலோசித்த பிறகு மகிழ்ச்சி

அடைந்து, உரத்த குரலில்) தோட்டி, இப்பொழுது வழி தெரிந்தது! இதுவே தகுதியான உபாயம். ஓர் உயிரைக் காப்பாற்ற மற்ருேர் உயிரைப் பலி கொடுக்க வேண்டும். பெரியதைச் சாதிக்கச் சிறியது விடத் தக்கதே. ஒரு மரத்தை வளர்க்க அண்டை மரத்தை அழிப்பதுதான் முறை; ஐயனே, இதோ உறங்கும் உதயசிம்மனை அவன் விழித்துக் கொள்ளாதபடி மெதுவாக எடுத்து உன் கூடையில் படுக்கவிட்டு, அக்கூடையைத் தலையில் தூக்கிக் கொண்டு கோட்டைக்கு வெளியே போ. அங்கு ஆற்றங்கரையோரமாக ஒரு கோவில் இருக்கிறதல்லவா! அக்கோவிலுக்குச் சென்று அங்குச் சிறிது நேரம் தங்கியிரு. நான் வந்து விடுகிறேன். பிறகு பேசிக்கொள்ளலாம்.

**தோட்டி :** (மகிழ்ச்சியுடன்) நான் அப்படியே செய்கிறேன். நீங்கள் எப்படி வனவீரனிடமிருந்து தப்பி வருவீர்கள்?

**பன்னு :** (சிரித்துக்கொண்டு) இதோ, என் குழந்தை உறங்குகிறதே! இதற்கு உதயசிம்மனின் துணிகளை உடுத்துவேன்.

**தோட்டி :** உம், அப்புறம்?

**பன்னு :** வனவீரன்வந்து உதயசிம்மன் எங்கே என்ருல் இதோ இருக்கிருன் என்று என் குழந்தையைக் காட்டுவேன்; அவன் கத்திக்கு என் குழந்தையை இரையாக்குவேன். பிறகு நான் தப்புவதற்கு என்ன சந்தேகம் இருக்கிறது? நீ உதயசிம்மனை எடுத்துக்கொண்டு புறப்படு. நேரமாகி விட்டது. (தோட்டி உதயசிம்மனை எடுத்துத் தன் கூடையில் வைத்துக்கொண்டு கூடையைத் தலையில் தூக்கிச் செல்கின்ருன்.

பன்னு உதயசிம்மனின் துணிகளைத் தன் குழந்தைக்கு உடுத்து கிருள்.)

[திரை விழுகிறது]

## காட்சி—2

இடம்: சித்தூர் அரண்மனையின் ஓரறை.

காலம்: நள்ளிரவு.

பாத்திரங்கள்: பன்னு, வனவீரன்.

**பன்னு:** (தனக்குள்) நான் தாய் அல்லேன். தாய் உள்ளம் எவ்வளவு அன்பு நிறைந்தது! அந்த அன்பு என்னிடத்தில் இருக்கிறதா? (பெருமூச்சுவிட்டு) பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த என் குழந்தையை—என் கண்மணியை—ஏன், என் ஆருயிரை இதோ பலிகொடுக்கத் துணிந்தேன். பெற்ற குழந்தையைப் பலிகொடுக்கும் பாவி நான்! பழி பாவம் அஞ்சாத பேரரக்கி நான்! (தன் குழந்தையைப் பார்த்து) ஆ, என்கண்ணே, சில வினுடிகளில் நான் உன்னை நமன் வாயில் திணிக்கப் போகிறேன். மேவாரின் மன்னனைக் காக்க உன் உயிர் போகப்போகிறது. நீ பெருமை பெற்ருய். ஒன்றுக்கும் உதவாத நான் பதர். பழியைச் சுமந்து பாரில் திரியும் பேய் நான்...... மனமே, ஏன் இவ்வாறு சஞ்சலப்படுகிருய்? கலங்காதே. தைரியமாய் இரு. மேவாரின் வருங் கால நல்வாழ்வு உன் நிலைமையைப் பொறுத் திருக்கிறது. தைரியங்கொள். உறுதியிலிருந்து தளராதே.

(யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறது. கதவைத் தட்டும் சத்தம்.)

**பன்னு :** (கம்பீரமான குரலில்) யாரங்கே ? இந்த இரவு நேரத்தில்.........

**வனவீரன் :** நான்தான் வனவீரன். கதவைத் திற.

**பன்னு :** (கதவைத் திறந்து) வாருங்கள் அரசே. இந்த நேரத்தில் தாங்கள் இங்குவர என்ன நேர்ந்தது ! (சிறிது தயங்கி) விக்கிரமசிம்மன் விடுதலை அடைந்தானு ?

**வனவீரன் :** (சினத்துடன்) ஆம், விடுதலை அடைந்தான். இவ்வுலக வாழ்விலிருந்து அவனுக்கு விடுதலை அளித்தேன். இதோ அவனது இரத்தம் தோய்ந்த வாள். (வாளைக் காட்டுகிருன்)

**பன்னு :** அரசே, அரச வாழ்வில் வாழ்வதும் வீழ்வதும் ஒருதலை அன்று. ஆனது ஆகிவிட்டது. அமைதியாக உறங்குங்கள்.

**வனவீரன் :** அமைதியா......? ஆம் அமைதிக்காகத்தான் இங்கு வந்தேன். எங்கே உதய சிம்மன் ? அவனை வெட்டியவுடன் எனக்கு அமைதி தான்.

**பன்னு :** (இரக்கமாக) மன்ன, என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள் ? வேண்டாம். அவன் குழந்தை ; தாய் தந்தையற்ற அருங்குழந்தை. நான் வளர்க்கும் என் செல்வம். அவனுக்கு அரசு வேண்டாம். நீங்களே என்றும் இம் மேவாரை ஆளுங்கள். அவன் உயிரோடு இருந்தால் போதும். அவனுக்கு உயிர்ப்பிச்சை மட்டுங் கொடுங்கள். அவனும் நானும் இந்நாட்டைவிட்டு வெளியேறி எங்கேயாவது சென்று வாழ்கிறோம்.

**வனவீரன் :** (ஆத்திரத்துடன்) உயிர்ப்பிச்சை......!

அவனுக்கோ உயிர்ப்பிச்சை......? அது கொடுக்க முடியாது. இன்று அவன் குழந்தை, நாளை அவன் என் எதிரி. இதில் சந்தேகம் இல்லை. எங்கே அவன் ? அவனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். கொண்டுவா, அவனை.

**பன்னு :** அரசே, சற்று யோசியுங்கள். இப் பச்சிளங் குழந்தையை......

**வனவீரன் :** (வேகமாக உள்ளே நுழைந்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை வாளால் கொன்று) இனி அமைதி தான். (வெளியேறுகிருன்.)

**பன்னு :** பாதக, உனக்கு அமைதியா ? உன் அமைதியை நீயே குலைத்துக் கொண்டாய். மேவாரின் வருங்கால வேந்தனுக்கு என் பிள்ளையின் குருதியால் திலகம் இடுகிறேன். காலப் போக்கில் அவன் உனக்கு அமைதி அளிப்பான், பார்.

—(திரைவிழுகிறது)

## காட்சி—3

**இடம் :**—கமல்மேர் அரண்மனைக் கொலுமண்டபம்.

**காலம்:**—பிற்பகல்.

**பாத்திரங்கள் :**—பன்னு, கமல்மேர் அரசன், அமைச்சர், சேனைத்தலைவர்கள், உதயசிம்மன்.

**பன்னு :** அரசே, இதுவே சமயம். நாம் வெகுநாட்களாக எதிர் பார்த்திருந்த சமயம் இது தான். இதைக் கை நழுவ விடக்கூடாது.

**அரசன் :** வீரத்தாயே, இன்றைய நிலைமையை உதயசிம்மனுல் சமாளிக்கமுடியுமா ?

**உதயசிம்மன் :** (அரசனைப் பார்த்து) அன்புள்ள

மன்னு. நான் வனவீரனை வெற்றிகொள்ளவில்லை என்றுல் என் வாழ்வு வீண். நான் நிலத்திற்குச் சுமை.

**அரசன் :** அருமை மைந்த, அவசரப்படாதே. நமது சேனைத் தலைவர்களின் எண்ணத்தை அறிவோம். (சேனைத் தலைவர்களைப் பார்த்து) மேவாரின் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா ?

**தலைவன் 1.:** அரசே, மேவாரில் வனவீரனின் அட்டூழியங்கள் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன.

**தலைவன் 2. :** அவனை விரும்புவோர் யாரும் அங்கில்லை.

**தலைவன் 3 :** சங்கிராம சிம்மனின் மகனைக் கண்டதும் மக்கள் யாவரும் மனமகிழ்ச்சியுடன் வீறுகொண்டு எழுந்திருப்பர்.

**அரசன் :** (வியப்புடன்) அப்படியா ? நம்மிடம் போதுமான படையிருக்கிறதா, இப்போது ?

**உதய :** வேந்தே, படையைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள் ? நமது ஒவ்வொரு தலைவரும் ஆயிரம் வனவீரர்களுக்குச் சமமானவர்கள். உயிரை மதியாது உடன் நிற்பவர்கள். இவ்வாறு இருக்க, படையைப் பற்றி நீங்கள் ஏன் யோசிக்க வேண்டும் ?

**அரசன் :** இருந்த போதிலும் அதுவும் சிந்தித்தற்குரிய செய்தி அல்லவா ?

**உதய :** அரசே, இவ்வளவு நாட்கள் சிந்தித்ததே அதிகம். அடிமை வாழ்வில் அயர்ந்து சிந்தித்துக் கொண்டிருத்தலைவிட உரிமையுடன் உயிர் துறப்பதே உத்தமம். இருபது ஆண்டுகளாகத்

தாங்கள் என்னைக் காப்பாற்றிப் பெரியவனாக்கினீர்கள். இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். இப்பொழுதே உத்தரவு கொடுங்கள். நான் போரில் வெற்றி பெற்றால் தங்கள் ஆசியுடன் நாட்டை ஆள்வேன். போரில் மாண்டால் என் தந்தை இருக்கும் வீரசுவர்க்கம் சேர்வேன். இதுவே அரசகுலத்திற்குரிய சீரிய செயல் அல்லவா ?

**பன்னா** : அரசே, நீங்கள் உதயசிம்மன் வெற்றி பெறுவானோ, மாட்டானோ என்ற வீண் கவலைப் படாதீர்கள். மேவார் மக்கள் என்ன வெறும் மண் பொம்மைகளா ? அவர்களுடைய உடலில் தூய இராஜபுத்திர இரத்தமல்லவா பாய்ந்தோடுகிறது ? அவர்கள் உள்ளத்தில் நாட்டுப்பற்று கொழுந்து விட்டெரிவது தங்களுக்குத் தெரியாததா என்ன ? வீர சங்கிராம சிம்மனை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவர் ஆட்சியில் மக்களுக்கு......(கண்ணீர் வருகிறது ; நாத்தழுதழுக்கிறது ; சமாளித்துக் கொண்டு,) அப்பேர்ப்பட்ட அரசருடைய மகன் உதயசிம்மன் என்று அவர்களுக்குத் தெரிந்தாலே போதும். குதூகலத்துடன் அவனை அரசனாக்க முற்படுவார்கள். வனவீரன் செயல்களே அவர்களுக்கு வேப்பங் காயாக இருக்கின்றன. அவன் செயல்களே அவனுக்கு இப்போது நமனாக ஆகிவிட்டன. ஆகவே நமது படைபலத்தால் நடக்க வேண்டியவை அந்நாட்டு மக்களின் ஒத்துழைப்பால் நடந்துவிடும். இது உறுதி. புறப்படச் செய்யுங்கள் படையை இப்பொழுதே. உண்மை உயர்வளிக்கும், அன்பு ஆதரவாகும் ;

உறுதி வலிதரும்; அறம் வெல்லும்; மறந் தோற்கும்.

**அரசன் :** சரி, அம்மா, நாளையே வனவீர ேனாடு போர் தொடுப்போம். (அமைச்சனைப் பார்த்து) அமைச்சரே இப்பொழுதே நம் படையைச் சித் தமாயிருக்க ஆணையிடுங்கள். மேவாருக்குத் தூது அனுப்புங்கள்.

**அமைச்சன் :** அப்படியே! (போர் முரசு ஒலிக் கிறது.)

**எல்லோரும் :** உதயசிம்மனுக்கு ஜே! மேவா ருக்கு ஜே!! (திரை விழுகிறது.)

## காட்சி—4

**இடம் :** சித்தூர் அரண்மனையில் கொலுமண்டபம்.

**காலம் :** பகல் பத்து மணி.

**பாத்திரங்கள் :** பன்னு, உதயசிம்மன், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வனவீரன், மற்றையோர்.

**பன்னு :** இந்த நன்னுளை எதிர்பார்த்து எத் தனையோ நாட்களாகத் தவம் கிடந்தோம். தவமும் பலித்தது. தரணியும் தகவு எய்தியது. மக்கள் மனம் மகிழ்ந்தது. (உதயசிம்மன் தலையில் மணிமகுடம் சூட்டப்படுகிறது.)

**எல்லோரும் :** (கரங்கொட்டி) சித்தூர் மகாராணு உதயசிம்மனுக்கு ஜே. சித்தூர் மகாராணு உதய சிம்மனுக்கு ஜே!!

**அமைச்சன் :** (பன்னுவைப் பார்த்து) தாயே, உமது வீரமும், தியாகமும் உலகத்திற்கு எடுத்துக் காட்டானவை; பொன்னெழுத்துக்களால் பொறிக்

கத் தகுந்த பெருமை உடையவை. நம் நாட்டை யும், மக்களையும், மன்னவனையும் காப்பாற்றிய பெருமை உம்முடையதே!

**பன்னு :** மந்திரிகளே, சேனைத் தலைவர்களே, இன்று வரையில் எந்த மாணிக்கத்தைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வந்தேனே, என் உயிரினும் உயர்ந்த பொருளாக மதித்து வந்தேனே, உள்ளத்தில் ஒளித்து வைத்திருந்தேனே, அந்த மாணிக்கத்தை—உதயசிம்மனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். இனி அவனைக் காப்பது உமது பொறுப்பு.

**அமைச்சர்கள் :** பெண் தெய்வமே, நாங்கள் அவனைக் கைவிடோம். கவலை வேண்டாம்.

**சேனைத் தலைவர்கள் :** வீரத்தாயே, இராஜ புத்திர வீரர்கள் தம் கடமையைச் செய்ய என்றுமே பின்வாங்குவதில்லை. இன்று உங்களால் வழிகாட்டப்பட்டதை அறிந்த பின்னர்த் தம் கடமையைச் செய்வதில் மேலும் ஊக்கம் கொள்வார்களே அன்றிச் சோம்பியிருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். ஆதலால் மகாராணு உதயசிம்மனைப் பற்றித் தாங்கள் கவலைப் படாதிருங்கள். அவனுக்கு இந் நாட்டில் இனி எதிரி என்பார் ஒருவரும் இருக்க மாட்டார்.

(இரண்டு போர் வீரர்கள் வனவீரனைக் கைதியாக்கி அழைத்து வருகிறார்கள்.)

**வனவீரன் :** ஆம், உதய சிம்மனுக்கு எதிரி இந்நாட்டில் இல்லை. அப்படி இருப்பானுனல் அவன் காலனுக்கு இரைதான். இதிற் சந்தேகம் இல்லை.

**சேனைத் தலைவன் :** யாரது? வனவீரனா?

**பன்னா :** வனவீர, ஏற்ற காலத்தில் நீயும் வந்தாய்! மகுடம் சூட்டு விழாவில் நீயும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுவது அவசியம்தானே!

**வனவீரன் :** ஆம், அவசியம்தான். அத்துடன் நான் செய்த பாபச் செயல்களுக்குத் தக்க தண்டனை அடையும் காலமும் இதுவே.

**பன்னா :** (வீரர்களைப் பார்த்து) வனவீரன் விலங்குகளைக் கழற்றுங்கள். (விலங்குகளை அகற்றுகிறார்கள்.)

(உதய சிம்மனைப் பார்த்து) மகாராணா, இவ்வைபவத்தில் இக்கைதிக்கு விடுதலை அளியுங்கள்.

**சேனைத் தலைவன் :** வீரமணியே, இது என்ன! உமது மகனைக் கொன்ற இப்பாவிக்கு மன்னிப்பா?

**வனவீரன் :** அம்மா, உமக்கு நான் செய்த அநீதி மிகக் கொடியது. அதற்கு.........

**பன்னா :** ஆம், அதற்கு நான் உன்னை மன்னித்து விட்டேன்.

**உதயசிம்மன் :** (முகத்தைச் சுளித்து) அம்மா!...

**வனவீரன் :** (உதய சிம்மனைப் பார்த்து இரக்கமாக) மகாராணா, கவலைப்படாதீர்கள். நான் இப்பொழுதே மேவாரை விட்டு வெளியேறிவிடுகிறேன். தங்கள் சுகத்திற்கும் நாட்டு மக்களின் நலத்திற்கும் நான் இடையூருக இங்கு வாழமாட்டேன். இது சத்தியம்.

**உதயசிம்மன் :** உன் விருப்பப்படி செய். நீ விடுதலை அடைந்தாய்.

**வனவீரன் :** மகாராணா வணக்கம், அன்னையே வணக்கம்.

**எல்லோரும் :** மகாராணு உதயசிம்மனுக்கு ஜே!

(திரை விழுகிறது.)

## அரும்பதவுரை

வழுவேன் - தவறமாட்டேன். அவலம் - துன்பம். ஒரு கணம் - ஒரு நொடி. நமன் - யமன். ஒருதலை - நிச்சயம். குருதி - இரத்தம். வீறு - பெருமை. கைம்மாறு - பதிலுதவி. தரணி - உலகம். தகவு - பெருமை. காலன் - யமன். இடையூறு - துன்பம். வைபவம் - கொண்டாட்டம்.

## வினுக்கள்

1. வனவீரன் யாவன்? அவன் மேவாரை எவ்வாறு கைப் பற்றினுன்?

2. பன்ஞ உதயசிம்மனை எவ்வாறு காப்பாற்றினுள்?

3. உதயசிம்மனைக் காப்பதற்குத் தோட்டி செய்த உதவி யாது?

4. தனது மகனைப் பலிகொடுக்கத் துணிந்த பன்ஞ தனக் குள் யாது எண்ணி வருந்துகிருள்?

5. வனவீரன் தனக்கு எதனுல் அமைதியுண்டாகுமெனப் பன்ஞவிடம் கூறுகிருன்?

6. உதய சிம்மனைக் கொல்லவந்த வனவீரனிடம் பன்ஞ வேண்டிக்கொள்வது யாது?

7. கமல்மேர் அரசனிடம் பன்ஞ மேவார் நாட்டு மக்களின் தேசப் பற்றையும் அரச விசுவாசத்தையும் பற்றி யாது கூறினுள்?

8. கமல்மேர் அரசன் சபையில் உதயசிம்மன் தன் வீரந் தோன்றக் கூறிய மொழிகள் யாவை?

9. இறுதியில் வனவீரன் காப்பாற்றப்பட்டது எவ்வாறு? ஏன் அவன் காப்பாற்றப்பட்டான்?

## கட்டுரைப் பயிற்சி

1. 'பன்ஞவின் அருங்குணங்கள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

2. வனவீரனுக்கும் பன்ஞவுக்கும் நடந்த உரையாடலை உமது சொந்த மொழிகளில் தெரிவிக்க.

3. உதயசிம்மனின் முடிசூட்டு விழாவில் நடந்த நிகழ்ச்சி களைச் சுருக்கி வரைக.

4. 'வனவீரனின் இரக்கமற்ற செயல்' என்பது குறித்து ஒரு பத்தி எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. வருவது கவலைப்படுவதால் வராமல் நின்றுவிடுமா?— இது என்ன வாக்கியம்? இதைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

2. கட்டளையை உணர்த்தும் வினை ஏவல் வினை எனப் படும். கட்டளையை மரியாதையாக அறிவிக்கும் வினை வியங் கோள் வினை (உ - ம்.) வா—ஏவல் வினை : வருக—வியங்கோள் வினை.

இப்பாடத்திலிருந்து சில ஏவல் வினைகளையும், வியங்கோள் வினைகளையும் எடுத்துக் காட்டுக.

3. வியங்கோள் வினை வாழ்த்து, வைதல், வேண்டுதல் முதலிய பல பொருள்களில் வரும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு உதாரணங்கள் கொடுக்க.

4. பன்னு "வனவீரன் தருவதற்கு முன்னமேயே நீ உதய சிம்மனைத் தூக்கிக் கொண்டு நகரத்திற்கு வெளியே சென்றுவிடு" என்று தோட்டியிடம் கூறினாள்—இதை அயற்கூற்று வாக்கியமாக எழுதுக.

## இலக்கணம்

### வழக்கு

1. இயல்பு வழக்கு :

(அ) நிலம், தண்ணீர், நெருப்பு, காற்று, வானம் என்பவை பழங்கால முதல் அப்பொருள்களின் பெயராக மாறுபடாமல் இலக்கணப் பொருத்தமுடையதாய் வழங்கி வருகின்றன. ஆகை யால் இவை 'இலக்கணம் உடையவை' எனப்படும்.

(ஆ) புறக்கடை, முன்றில், புறநகர், வாயில், வாய்க்கால் என்பவை உலக வழக்கில் வழங்கி வருகின்றன. ஆனால் இவை இலக்கண முறைப்படி 'கடைப்புறம், இல்முன், நகர்ப்புறம், இல்வாய், கால்வாய்' என்று மாறி இருக்கவேண்டும். எனவே, இவை இலக்கணம் உடையதுபோல வருதலின், 'இலக்கணப் போலி' எனப்படும்.

(இ) கச்சி, சோணாடு, அருமந்த பிள்ளை, நாகை என்ற சொற்கள் முறையே காஞ்சீபுரம், சோழநாடு, அருமருந்தன்ன

பிள்ளை, நாகப்பட்டினம் என்ற சொற்கள் மருவி வழங்குவன வாம். எனவே அவை மரூஉமொழி எனப்படும்.

இங்ஙனம், இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்ற மூன்றும் இயல்பு வழக்கு எனப்படும்.

2. தகுதி வழக்கு :

(அ) சில சொற்களை இவ்வாறு கூறுதலே தகுதி என்று மறைத்துக் கூறுதல் ‘ தகுதிவழக்கு ’ எனப்படும்.

(ஆ) தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம் குழூஉக்குறி என மூவகைப்படும்.

(இ) கால் கழுவி வந்தேன். இங்கு மலங்கழுவி என்பதையே கால் கழுவி என்று இடக்கரான (இழிவான) சொல்லை அடக்கிக் கூறுவதால், இடக்கரடக்கல் எனப்பட்டது.

(ஈ) செத்தார் என்ற அமங்கலமான சொல்லுக்குப் பதில் புகழுடம்பு பெற்றார் என்றும், ஓலையைத் திருமுகம் என்றும் மங்கலமாகக் கூறுவது மங்கலம் எனப்படும்.

(உ) கள்ளைச் சொல் விளம்பி என்றும், பொன்னைப் பறி என்றும் தங்களுக்கு மட்டும் விளங்கும்படி ஓர் கூட்டத்தினரால் (குழு) வழங்கப்படுவது குழூஉக்குறி எனப்படும்.

## வழுவமைதி

1. வழு - பிழை. வழுவான சொற்களையும் ஒரு காரணம் பற்றி அமைத்துக்கொள்ளுதல் வழுவமைதி எனப்படும்.

2. வழுவமைதி பலவகைப்படும். அவை திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இடவழுவமைதி, கால வழுவமைதி என்பன வாம்.

3. வீட்டில் உள்ள பசுவை இலக்குமி வந்தாள் என அழைப்பது அன்பு பற்றியது. அஃறிணையான பசுவை உயர் திணையாக அமைத்தாலும் அது பொருந்தும். கிளியார் சென்றார் ; பூனையார் சொன்னார் (பஞ்ச தந்திரம்) என்பவையும் இப்படியே. இவை திணைவழுவமைதியாகும்.

4. தாய் தன் ஆண் குழந்தையை “ என் அம்மா ! வா ” என்று அழைக்கிறாள். இது வழுவாயினும் அன்பு பற்றி அமைத்துக் கொள்ளப்படும். எனவே இது பால் வழுவமைதி யாம்.

# செய்யுட் பகுதி

## I நீதி

### பழமொழி நானூறு

#### கல்வி

உரைமுடிவு காணன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். (1)

#### அரசியல்பு

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். (2)

#### மேன்மக்கள்

கூர்த்துநாய் கௌவிக் கொளக் கண்டும்தம் வாயால்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை ;—நீர்த்தன்றிக்
கீழாய கீழ்மக்கள் சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு. (3)

#### உறவினர் உரைபோற்றல்

உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பதே நன்று—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர !
தாய்மிதித்து ஆகா முடம். (4)

27908

## பேதையின் இயல்பு

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். (5)

—முன்றுறையரையனார்

குறிப்பு : பழமொழி, சங்க நூல்களுள், பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது. 400 பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாட்டிலும் ஓர் பழமொழி அமைந்திருக்கும். இதனை இயற்றினவர் முன்றுறையரையனார். இவர் பாண்டி நாட்டினர்; மன்னர். இவரது காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டு.

TB 031(3) N54

### அருஞ்பதவுரை

1. உரை முடிவு காணான் - நீதியின் உண்மையை அறிய முடியாதவன் ; நரைமுடித்து - முதியவர்போல் வேடம் பூண்டு ; சோழன் - கரிகாலன். குலவிச்சை கல்லாமற் பாகம்படும் - பழமொழி.

2. நடக்கையின் - ஒழுக்கத்தில் ; ஒள்ளியன் - சிறந்தவன் ; வைத்தல் - அதிகாரத்தைக் கொடுத்தல் ; குரங்கின் கைக்கொள்ளி கொடுத்துவிடல்—பழமொழி.

3. கூர்த்து - கோபித்து ; பேர்த்து - மீண்டு (திரும்ப) ; நீர்த்து + அன்றி = நீர்த்தன்றி - இயல்பல்லாத ; கீழ் + ஆய = கீழாய - இழிவான சொற்களை ; “கூர்த்து நாய்......ஈங்கில்லை” —பழமொழி.

4. உளைய - மனம் வருந்த ; புள் + கலாம் = புட்கலாம் - பறவைகள் விளையாடும் ; பொய்கை - குளம் ; புனல் - நீர் ; ஊர - நாடனே ! தாய் மிதித்து ஆகா முடம்—பழமொழி.

5. பொல்லாத - தீய வார்த்தைகளை ; பேதை - அறிவில்லாதவன் ; துயர்படுக்கும் - துன்பத்தில் அகப்படுத்திக் கொள்வான் ; நுணல் - தவளை ; நுணலுந் தன் வாயாற் கெடும்—பழமொழி.

## வினாக்கள்

1. பழமொழி என்பதென்ன? அதன் ஆசிரியர் யார்?
2. குலவித்தை கல்லாமற் பாகம் படும்—இதை விளக்கும் சம்பவம் யாது?
3. குரங்கின் கைக்கொள்ளி கொடுத்துவிடல் போன்றது எது?
4. மேன் மக்களின் இயல்பு யாது?
5. தாய் மிதித்து ஆகா முடம்—இது எதனை விளக்குகிறது?
6. நுணலுந் தன் வாயாற் கெடும்—இது போன்றது எது?

## அறநெறிச் சாரம்

### உயர்ந்த மூன்று குணங்கள்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும், துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையு மிம் மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை. (1)

### மக்கட் பிறப்பின் சிறப்பு

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பின்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன் கண்
நிற்றலுங் கூடப் பெறின். (2)

### பொறுமையின் பெருமை

எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத் தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னு நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதொன்றும் வேண்டாம் தவம். (3)

### செல்வர் கடமை

செல்வத்தைப் பெற்ருர் சினங் கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லவாம்
தானம் மறவாத தன்மையரேல் அஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. (4)

### உண்மைச் சுற்றத்தார்

நல்லறம் எந்தை நிறையெம்மை நன்குணரும்
கல்வியென் ருேழன் துணிவெம்பி—அல்லாத
பொய்ச் சுற்றத் தாரும் பொருளோ ? பொருளாய
அச்சுற்றத் தாரில் எனக்கு. (5)

—முனைப்பாடியார்

குறிப்பு: அறவழிகளின் சாரமானவற்றைக் கூறும் நூல். இதன் ஆசிரியர் முனைப்பாடியார். சமண சமயத்தினர். கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டினர்.

1. தூயவாய் - குற்றமின்றி; வன்மை - கொடுமை; ஆற்றும் - பொறுத்துக் கொள்ளும்; ஆற்றல் - வலிமை; காய்வு - கோபம்; சால - மிகவும்.

2. ஏமாப்பு - பாதுகாப்பு.

3. எள்ளி - இகழ்ந்து; இன்னுச் சொல் - கொடுஞ் சொல்.

4. கடிந்து - நீக்கி; செவ்வியராய் - சுலபராய்; நெருங்கக் கூடியவராய்; கிளை - உறவினர்; பாத்து - பிரித்துக் கொடுத்து; வைப்பு - சேமிப்பு.

5. நிறை - மனவடக்கம்; எம்பி - என் தம்பி; பொருளாய - உண்மையான.

### விஞக்கள்

1. அறநெறிச் சாரம்—குறிப்பெழுது.
2. தலை சிறந்த குணங்கள் எவை ?
3. மக்கட் பிறப்பு எப்பொழுது சிறந்ததாகும் ?
4. எப்பொழுது வேறு தவம் வேண்டாம் ?
5. செல்வர் கடமை யாது ?
6. பொருளாய சுற்றம் எது ?

# II கதை

## அரிச்சந்திர புராணம்

### சந்திரமதி இறந்த மகனைக் காணல்

பாவியேன் மகனே என்பள்;
　　பதைப்பள்; மென்முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று
　　தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங் கண்ணீர் பாயக்
　　கதறுவள்; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித் தேடி
　　அலமரும் உடலம் ஒத்தாள். (1)

ஓடினாள்; உள்ள மெல்லாம்
　　உருகினாள்; கருகி மேனி
வாடினாள்; விறகு வைத்த
　　வடத்தினுக்(கு) அருகே வந்தாள்;
நாடினாள்; கழுகும் பேயும்
　　நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவி(ன்) நாப்பண்
　　குமரனைச் சென்று கண்டாள் (2)

### சந்திரமதி புலம்பல்

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
　　பசியா(ல்) அலைந்தும் உலவா
அநியாய வெங்க(ண்) அரவா(ல்) இறந்த
　　அதிபாவ(ம்) என் கொல் அறியேன்;

தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே !
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே ! (3)

வானின் றிழிந்து சொரிகின்ற தாரை
மழைபோல வீழ விழி நீர்,
ஊனின்றி மேனி யுதிரங்கள் சிந்த
உயிரின்றி வெம்பு தழலின்
மேனின்று வெந்த தளிர்போ(ல்) உயங்கி
விதியாரை நொந்து தனியே
யா(ன்) நின்(று) இரங்க ஏனென்ப தில்லை ;
இதுவோ வுனீதி மகனே ! (4)

செங்கோ(ல்) அறத்தின் முறையே செலுத்து
திறலோன், எவர்க்கு முரவோன்,
வெங்கோப யானை விறன் மன்னன் நம்மை
விடுவிக்க எண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு ! மகிழ்ந்த பரிவால்
எங்கே எனுசை மகனென்(று) உரைக்கில்
எதி(ர்)ஏது சொல்வன் மகனே ! (5)

நீராள வாவி சொறிநா(டு) அனைத்தும்
நிறைமா தவற்(கு) உதவியும்,
பாராளு நீர்மை தொடர்பற்ற(து) அன்று,
படியாளு(ம்) எந்தை முடியில்,
காராள(ர்) ஏர்கள் கடவோசை ஒய்வில்
கன்னேசி நா(டு)அதனை மேல்
ஆராள வல்லர் ? அவமே வனத்தில்
அரவா(ல்) இறந்த மகனே ! (6)

நல்லோர் வகுத்த முறையா(ம்) அறங்கள்
நாலெட்டி(ல்) ஒன்று குறையேம் ;
இல்லோரை யற்ப மிகழேம் ; இறுக்கும்
இறையன்றி ஏற உகவேம் ;
சொல்லோ மறுத்து(ம்) உரையோம் உரைத்த
துறவோர்கள் புத்தி கடவோம் ;
எல்லோர் தமக்கும் இதமே விளைப்பம் ;
ஏதாக வந்தி(து) இதுவே ! (7)

என்னுய கன்றன் மணிமார்பி(ல்) ஏறி
விளையாடு கின்ற எழிலோய் !
முன்னுய் விளைந்த கனல்மூழ்க எம்மின்
முதலே நடந்த மதலாய் !
செந்நாய் திரண்டு செறிகா(ன்) இருந்து
தெளியா(து) இரங்கு(ம்) எனை நீ
அன்னுய் வருந்த லை எனுத(து) உன்றன்
அறிவுக் கடாது மகனே ! (8)

என மறுகி, " இவனுட(ன்) நாம் இறந்தோ மாகில்
இவனையெடுத் தெரித்தடுக்க வுரியா ரில்லை ;
மனமுருகான் நம்மை விலை கொண்டோன் ; சால
வன் கண்ணன் ; மனைவியவன் றனின்மா பாவி
சினமுடையார் ; விடியுமுதற் செல்லே னுகில்
செறுவ(ர்) ; இவன் றனைக் கருக்கிச் செல்வேன் " என்று
தனதுதிரு மகனையெடுத்(து) அணிதோள் வைத்துத்
தள்ளாடி மதிதயனுர் தனயை மீண்டாள் (9)

காடுமே டுஞ்செறிந்த செந்நாய் முன்னே
கவ்வியிழுத் திடப்பறந்து கழுகுமோத ;
" போடுபோ " டெனப்பலபேய் தொடரக், " கொண்டு
போகேல்நீ " எனக்கொடிய பூதஞ்சூழ ;

மாடுதோ றும்பறிக்க ; நரிகள் தாவ ;
வார்குழலும் சோர்துகிலும் வனந்தொட்டீர்க்க;
ஈடுபா(டு) இத்தனையும் பட்டு நீண்முள்
இடுகாடு நீந்திநெடுஞ் சுடுகாடுற்ருள். (10)

பிணங்கள் சுடும் கடும்புலையர் அரவத்தாலும் ;
பிளந்துதலை வெடித்திடுபேர் அமலையாலும் ;
நிணங்கருகிச் சுறுநாறும் முடையினுலும் ;
நெடுங்கனலின் கொழுந்தெழுந்த நிவப்பினுலும் ;
கணங்கள்மிகக் களித்தாடும் துழனியாலும் ;
கனற்பொறியின் மலிவாலும் ; புகையினுலும் ;
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பினுலும் ;
தோகையறிந்து உணர்ந்துகொடுஞ் சுடலை
சார்ந்தாள். (11)

கண்டனள் ; ஈ(து) ஈமம்எனக் கருத்தி(ல்) உன்னிக்
கடவுளர்தங் காவலில்தன் மகனை வைத்துப்
பண்டுவெந்து கரிந்த் குறைக் கட்டை யெல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெடுத்துக்
கொண்டுவந்து பிணங்கள்சுடுஞ் சுடலை நண்ணிக்
கொள்ளி யெடுத் தோடியனல் கூட்டி மூட்டி
மண்டுதழற் கட்டையின்மேல் மகனைவைத்தாள்
வளர்ந்தெரியும் கனல்விளக்கம் மன்னன் கண்
டான். (12)

அரவுகடித் தரசிளங்கோ இறந்தானென்ப
தறியாமல் வெகுண்டிறைவன், "ஆரே இந்த
இரவு தனிற் பிணஞ்சுடுவா ரறிவோம்", என்று
எழுந்திருந்து விரைந்தோடி, "ஏடி மூடி !

தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
தனியேயிப் பனியிருளிற் சவங்கொணர்ந்து
கரவின்அழற் சுடுவதுனக்கு அடைவோ?'' என்னுக்
கால்வீசிக் கான்முளையை எடுத்தெறிந்தான் (13)

—நல்லூர் வீரகவிராசர்

குறிப்பு: அரிச்சந்திர புராணத்தின் ஆசிரியர் நல்லூர் வீரகவிராசர். இவர் ஆசுகவி பாடுவதில் வல்லவர். கி. பி. 1524-ல் அரங்கேற்றப்பட்டது.

## அரும்பதவுரை

1. காவி அம்கண் - நீலோற்பல மலர் போன்ற அழகிய கண்; அலமரும் - துன்பமடையும்.

2. வடம் - ஆலமரம்; குறள் - பூதம்; நாப்பண் - இடையில்.

3. உலவா - அழியாத, இறவாத; அரவு - பாம்பு; செறிந்து - மிகுந்து.

4. ஊன் இன்றி - தசை இல்லாமல்; மேனி - உடல்; உதிரம் - இரத்தம்; உயங்கி - வருந்தி, வாடி.

5. திறலோன் - வல்லமையுடைய அரிச்சந்திரன்; உரவோன் - அறிவு வலிமை யுடையவன்; விறல் - வலிமை; மன்னன்- அரிச்சந்திரன்; பங்கேருகம் - தாமரை; வதன - முகத்தை யுடையவனே.

6. நீராள வாவி - நீர் நிரம்பிய குளங்கள்; செறி - நிறைந்த; நிறைமாதவன் - நிறைந்த சிறந்த தவத்தை யுடைய விசுவாமித்திர முனிவன்; நீர்மை - இயல்பு; பார் - பூமி (கன்னேசி நாடு); எந்தை - என் தந்தை (மதிதயன் - சந்திர மதியின் தந்தை); முடியில் - இறந்து போனல்; காராளர் - உழவர்கள்; ஏர்கள் கடவு ஓசை ஒய்வு இல் - ஏர்களில் பூட்டியுள்ள எருதுகளை அதட்டி யோட்டுவதனுல் உண்டாகும் ஓசை ஓயாமல் நிறைந்துள்ள; அவமே - வீணுக.

7. அறங்கள் நாலெட்டில் - முப்பத்திரண்டு தருமங்களில்; இறை - வரி; இறுக்கும் - செலுத்தவேண்டிய; ஏற - அதிகமாக; உகவேம் - விரும்ப மாட்டோம்.

8. எழில் - அழகு; மதலை - குழந்தை; முன்னுய்.......... மதலாய்!—விசுவாமித்திரன் சூழ்ச்சியால் காட்டுத்தீ அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன் ஆகியோரைச் சூழ்ந்துகொள்ள, லோகிதாசன் முதலில் தீயில் விழச் சென்றுன் என்பது நிகழ்ச்சி; கான் - காடு; அடாது - தகாது.

9. சால - மிகவும் ; வன்கண்ணன் - கொடியவன் ; செறுவர்-தண்டிப்பர் ; தனயை - மகள்.

10. மாடு - பக்கம் ; வார் - தொங்கும் ; ஈடுபாடு - துன்பம்.

11. அரவம் - ஓசை ; அமலை - ஓசை ; துழனி - ஓசை ; நிவப்பு - உயர்ச்சி ; சுணங்கு - நாய் ; தோகை - சந்திரமதி (உவமையாகு பெயர்); கணங்கள் - பேய்க் கூட்டங்கள் ; நிணம் - தசை ; முடை - மாமிச நாற்றம்.

12. ஈமம் - சுடுகாடு ; உன்னி - எண்ணி ; பண்டு - முன்பு ; மண்டுதழல் - மூண்டெரிகின்ற நெருப்பு ;

13. வெகுண்டு - கோபித்து ; இறைவன் - அரசனான அரிச்சந்திரன் ; பனியிருள் - குளிர்ந்த இரவு ; அடைவோ - தக்கதோ ?; சவம் - பிணம் ; கரவின் - ஒளிந்து ; அழல் - தீ ; கான் முளை - புதல்வன்.

## வினாக்கள்

1. சந்திரமதி தன் மகனை எங்கே கண்டாள் ?
2. சந்திரமதி புலம்பிக் கூறியவைகளைத் தொகுத்து எழுதுக.
3. நாடனைத்தும் நிறை மாதவற்கு உதவிய வரலாறு யாது ?
4. பாராளும் நீர்மை தொடர்பற்றதன்று—யாருக்கு ? ஏன் ?
5. முன்னாய் விளைந்த கனல் மூழ்க எம்மின் முதலே நடந்த மதலாய்—இதிலுள்ள வரலாறு யாது ?
6. தன்னை விலை கொண்டவரைப் பற்றிச் சந்திரமதி கூறியதென்ன ?
7. பிணத்தை யெடுத்துச் செல்லும் பொழுது சந்திரமதிக்கு ஏற்பட்ட துன்பங்கள் எவை ?
8. சந்திரமதி சுடுகாட்டை எவற்றால் அறிந்தாள் ?
9. சந்திரமதி மண்டுதழல் மூட்டியது எங்ஙனம் ?
10. கனல் விளக்கம் கண்ட அரசன் என்ன செய்தான் ?

## நளவெண்பா

**நளன் தன் மக்களைக் காண்டல்—நளன் வினா**

மக்களை முன்காணா மன்நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—'மக்காள் ! நீர்
என் மக்கள் போல்கின்றீர் ; யார்மக்கள் ?' என்று
[ரைத்தான்
வன்மக் களியானை மன். (1)

### மக்களின் பதில்

‘மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்’, என்றா ரழுது. (2)

### நளன் வினா

‘உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே!’ என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. (3)

### மக்கள் மறுமொழி

‘நெஞ்சால் இம்மாற்றம் நினைந்துரைக்க நீயல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா!—எஞ்சாத
தீமையே கொண்ட சிறுதொழிலோய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.’ (4)

‘எந்தை கழலிணையில் எம்மருங்குங் காணலாம்
கந்து சுளியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு.’ (5)

### நளன் மறுமொழி

‘மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்’ என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். (6)

—புகழேந்திப் புலவர்

குறிப்பு : பாடப்பகுதி நளவெண்பா என்ற நூலில் வந்துள்ளது. இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். அவர் தொண்டை நாட்டில் பொன்விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் தோன்றியவர். சுமார் 800 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். ‘வெண்பாவிற் புகழேந்தி’, என்ற சிறப்புப் பெற்றவர். மள்ளுவ நாட்டு மன்னன் சந்திரன்சுவர்க்கியால் ஆதரிக்கப்பட்டவர்.

## அரும்பதவுரை

வன்மம் - பகை ; களி - மத மயக்கம் ; மன் - அரசன் ; கான் - காடு ; வளநாடு - வளப்பம் பொருந்திய நிடத நாடு ; உறைதல் - வசித்தல் ; இழுக்கு - குற்றமுடையது ; மாற்றம் - வார்த்தை ; அடுமடையன் - சமையல் வேலை செய்பவன் ; எஞ்சாத - குறையாத ; கோமான் - அரசன் ; வலி - பலம் ; எந்தை - என் தந்தை ; கழல் - காலில் அணியும் வீரத்திற் கறிகுறியான அணி (பாதம்) ; எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும் ; கந்து - கட்டுத்தறி ; சுளியும் - கோபித்து முறிக்கும் ; களிறு - ஆண்யானை ; கடாம் - மதம் ; பணி - பாம்பு ; பார் - பூமி ; வடு - அடையாளம் (தழும்பு) ; முனிந்து - கோபித்து ; வார - சொரிய.

## வினுக்கள்

1. மக்களைக் கண்ட நளன் என்ன செய்தான் ?
2. யார் என்ற நளனுக்கு மக்கள் கூறிய விடை யாது ?
3. நளன் மக்களின் தகுதி அறிய என்ன செய்தான் ?
4. மக்கள் கோபித்துக் கூறிய மொழிகள் யாவை ?
5. நளன் அவர்களிடம் எவ்வாறு மன்னிப்புக் கோரினன் ?

## மனேன்மணீயம்

### புல்

நடராஜன் தனி மொழி

இதோஓ ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்
சதா தன் குறிப்பொடு சாருதல் காண்டி !
அதன்சிறு பூக்குலை அடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்றுளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து

ஆசிலாச் சிறுகாய் ஆக்கி, இதோ !என்
தூசிடைச் சிக்குந் தோட்டியும் கொடுத்தே,
“ இவ்வயின் யாமெலாம் செவ்விதிற் றுன்னில்
தழைப்பதற் கிடமிலே ; சிறூர் ! நீர் பிழைப்பதற்கு
ஏகுமின் ! புள்ஆ எருதயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின் !” எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனும் காண்போர் ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனே செயாது ஆங்காங்கு,
தோற்று பேரழகும் ஆற்றல்சால் அன்பும்
போற்றுதம் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப
ஆர்த்தெழும் அன்பினுல் அனேத்தையும் கலந்துதம்
என்பெலாம் கரைக்கும்நல் இன்பம் திளேப்பர்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளே

குறிப்பு : மனேன்மணீய ஆசிரியர் : P. சுந்தரம் பிள்ளே M.A. தந்தை : பெருமாள் பிள்ளே. தாய் : மாடத்தியம்மாள். பிறப்பிடம் : திருவாங்கூர் நாடு. காலம் : பத்தொன்பதாம் நூற்ருண்டு.

## அரும்பதவுரை

சதா - எப்பொழுதும் ; காண்டி - காண்பாயாக ; நல்லூண் - நல்ல உணவு ; பூம்பராகம் - மகரந்தம் ; ஆசு + இல்லா = ஆசிலா - குற்றமற்ற ; தூசு - ஆடை ; தோட்டி - கொக்கி ; இவ்வயின் - இவ்விடம் ; துன்னில் - நெருங்கி வாழ்ந்தால் ; அயம் - ஆடு ; பரிவு - அன்பு ; புலன் - அறிவு ; ஆர்த்து எழும் - பொங்கி எழும் ; திளேப்பர் - அனுபவிப்பர்.

## விளுக்கள்

1. புல் எப்படிச் சிறுகாய் ஆக்குகிறது ?
2. புல் தன் சிறுவருக்குக் கூறும் புத்திமதி யாது ?
3. புல்லினின்றும் மக்கள் அறிந்து இன்புறுவதென்ன ?

# III தனிப்பாடல்கள்

## 1. பெரியது

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்?
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியின் வந்தோன்;
கரியமாலோ அலைகடல் துயின்ருேன்;
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்;
கலசமோ புவியிற் சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒரு தலைப்பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

—ஔவையார்

## 2. பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

## 3. ஐந்து 'டு' வரப்பாடியது

ஓ, கா, மா, வீ, தோ வுரைப்பன், டு, டு, டு, டு, டு,
நாகார் குடந்தை நகர்க்கதிபர்—வாகாய்
எடுப்பர், நடமிடுவ(ர்), ஏறுவர், அன்பர்க்குக்
கொடுப்பர், அணிவர் குழைக்கு.

—காளமேகப் புலவர்

## 4. திருமால் துதி

சோனையுங் காத்துநல்
லானையுங் காத்துத் துரோபதை தன்
தானையுங் காத்தடைந்
தானையும் காத்துத் தடத்தகலி
மானையுங் காத்தனு
மானையும் காத்துமடு வில் விழும்
ஆனையுங் காத்தவ
னேயெனைக் காப்ப தரிதலவே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## 5. திப்பையராயனைப் புகழ்ந்தது

இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான் ;
அக்கினி உதரம்விட் டகலான் ;
இயமன் எனைக் கருதா(ன்) அரனெனக் கருதி ;
நிருதி வந்(து) என்னை என் செய்வான் ?
அந்தமாம் வருண(ன்) இருகண்விட் டகலான் ;
அகத்தினில் மக்களும் யானும்
அநிலம தாகும் அமுதினைக் கொள்வோம் ;
யா(ர்) எதிர் எமக்குளா(ர்) உலகில் ?
சந்தத(ம்) இந்த வரிசையைப் பெற்று
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய்சற் கீர்த்தி
சாளுவ கோப்பையன் உதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா வன்னேன்
வாக்கினல் குபேரன் ஆக்கினன் ; அவனே
மாசி(ல்) ஈசான பூபதியே.

—சொக்கநாதப் புலவர்

## 6. சென்னையை யடைந்து சிவபெருமானது

சென்னபுரி மேவிச் சிவனுனே(ன்) நல்ல
அன்ன மறியா தவனுகி—மன்னுசிரங்
கய்க்கொண் டரைச்சோமன் கட்டிச் சடை முறுக்கி
மெய்க்கொண்ட நீறணிந்து மே.

—இராமகவிராயர்

### அரும்பதவுரை

1. எரிதவழ் - வெப்பம் பரவிய; புவனம் - உலகம்; மால் - திருமால்; உந்தி - தொப்புள்; குறுமுனி - அகத்திய முனிவர்; கலசம் - கும்பம்; புவி - பூமி; அரவு - பாம்பு.

2. பாம்புக்கு :—பெரிய விடமே சேரும் - உயிரைக் கொல்லக் கூடிய கொடிய நஞ்சையுடையதாகும்; பித்தர் - சிவபெருமான் (பித்தா என்று சுந்தரரால் சிவபெருமான் அழைக்கப்பட்டார்); அரி உண்ணும் - காற்றை உட்கொள்ளும்; உப்பும் - உடல் பருக்கும்; மேல் ஆடும் - தலை தூக்கியாடும்; எரிகுணமாம் - கோப குணமுடையதாகும்.

எலுமிச்சம்பழத்திற்கு :—பெரிய இடமே சேரும் - பெரியவர்கள் கையில் கொடுக்கப்படும்; பித்தம் தலைக்கேறியவர்கள் தலையில் வைத்துத் தேய்க்கப்படும்; அரியுண்ணும் - துண்டு துண்டாக அரியப்படும்; உப்புமேல் ஆடும் - அதன்மேல் உப்பு தூவப்படும்; எரிகுணமாம் - அதன் சாறுபட்டால் எரிச்சல் உண்டாகும்.

3. நாகார் குடந்தை நகர்க்கு அதிபர் - இளைஞர் நிறைந்த கும்பகோண நகரத்திற் கதிபதியான சிவபெருமான்; வாகாய் - அழகாக; ஓடு எடுப்பர்; காடு நடமிடுவர்; மாடு ஏறுவர்; வீடு அன்பர்க்குக் கொடுப்பர்; தோடு அணிவர் குழைக்கு; உரைப்பன் - என்று சொல்லுவேன். ஒரு காதில் அணிந்த குண்டலத்திற்கு நேராக மற்றொரு காதில் தோடு அணிந்து கொள்வார்.

4. சோனையும் காத்து - மழையையும் தடுத்து; நல் ஆனையும் காத்து - நல்ல பசுக்கூட்டங்களையும் காப்பாற்றி (கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துப் பெரு மழையைத் தடுத்துப் பசுக்களைக் காப்பாற்றிய வரலாறு). துரோபதை தன் தானையும் காத்து - பாஞ்சாலியின் சேலை பெருகும்படி செய்து அவள் மானத்தைக் காத்து; அடைந்தானையும் காத்து - சரண மடைந்த விபீஷணனைப் பாதுகாத்து (இராமவதாரத்தில்); தடத்து அகலி மானையும் காத்து - வழியில் கல்லாய்க் கிடந்த அகலிகை என்ற பெண்ணின் சாபத்தைப் போக்கி அவளைப்

பாதுகாத்து (இராமவதாரத்தில்); அனுமானையும் காத்து—மடுவில் விழும் ஆனையும் காத்தவனே! - கஜேந்திரன் என்ற யானையைப் பாதுகாத்தவனே.

5. இந்திரன் - ஆயிரங் கண்களையுடையவன். (உடல் முழுவதும் துவாரங்களையுடையவன்). கலை - ஆடை; மருங்கு - இடுப்பு; உதரம் - வயிறு; அரன் - சிவபெருமான் (குளிக்காமல் உடம்பெல்லாம் சாம்பல் பூத்திருந்தது); அந்தம் - அழகு; அநிலம் - காற்று; சந்ததம் - எப்பொழுதும்; வரிசை - சிறப்பு; தலைசெய்யும் - வணங்கும்; உதவும் - பெற்ற; மந்தரபுயத்தான் - மந்தர மலை போன்ற தோள்களையுடையவன்; மாசு - குற்றம்.

6. சென்னைக்குச் சென்று அன்னத்தை (சோற்றை) (அன்னப் பறவையால்) அறியா - காணாதவனாய் (காணமுடியாதவனாய்); சிரங்கைக்கொண்டு - சிரங்கை கையில் பெற்று; (சிரத்தை (தலையை)க் கையில் ஏந்தி). அரைச் சோமன் - பாதியாடை, பிறைச் சந்திரன்; சடைமுறுக்கி - எண்ணெய் காணாததால் சடையாகி; மெய்க்கொண்ட நீறணிந்துமே - குளிக்காததால் உடம்பெல்லாம் நீறு பூத்தது.

## வினாக்கள்

1. தொண்டர் பெருமையை ஔவையார் எங்ஙனம் கூறுகின்றார்?

2. 'பெரிய விடமே சேரும்'—என்று தொடங்கும் செய்யுளில் உள்ள சிலேடை நயத்தை விளக்குக.

3. ஐந்து 'டு'க்களைக் கொண்டு சிவபெருமானின் எச்செயல்களைக் காளமேகப் புலவர் கூறுகிறார்?

4. திருமால் தன்னைக் காப்பது அரிதல்ல என்பதற்குப் புலவர் காட்டும் உதாரணங்கள் எவை?

5. எட்டுத் திக்குப் பாலகர்களையும் கவிஞர் எவ்வாறு பயன் படுத்தியுள்ளார்?

6. இராம கவிராயர் சென்னைக்குச் சென்று சிவமான தெப்படி?

TB 031(3) N54
87908

RSR/1176

# PUDUMAI TAMIL VACHAKAM

FOR

FORM III—SPECIAL STUDY

AUTHOR

VIDWAN V. MANICKAM

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM TIRUCHIRAPALLI | 2/27, BROADWAY G. T. MADRAS

*Copyright*]

*Price Re.* 0–10–0